# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 09 புதன்கிழமை (22-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:100



யாழ்ப்பாணத்தில் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று இங்கு வந்து சேர்ந்த பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டா ஜோய் டபீல்ட் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தார். அங்கு நடந்த கலந்துரையாடலில் பங்குபற்றிய பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள் ஆகியோரை முதலாவது படத்திலும் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையுடன் தூதரும் அவரது ஆலோசகரும் நடுவில் உள்ள படத்தில் காணப்படுகின்றனர். கலந்துரையாடலில் பங்குபற்றிய மாணவர் பிரதிநிதிகளை மூன்றாவது படத்தில் காணலாம்.

படங்கள்: பொ.இராஜேஸ்வரன்.

## செம்மணி புதைகுழி சந்தேக நபர்களான

# 5 படையினரையும் பிணையில் விடக்கோரி

# வவுனியா நீதிமன்றில் நேற்று விண்ணப்பம்

### நீதிவான் ஏற்க மறுப்பு

வவுனியா,மார்ச்22

**செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டிருக்கும் நான்கு படை அதிகாரிகள் மற்றும் ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் ஆகியோரைப் பிணையில் விடுவிக்கக்கோரி வவுனியா மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்று நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.**

**வவுனியா மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.சிறிஸ்கந்தராசா அந்த விண்ணப்பத்தை ஏற்க மறுத்து விட்டார்.**

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் கடந்த 13ஆம் திகதி கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் 4படை அதிகாரிகளும் ஒரு பொலீஸாரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் சந்தேக நபர்களான இவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை வெலிக்கடைச் சிறையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு புனர்வாழ்வு அமைச்சராக சரத் அமுனுகம நேற்று பதவியேற்பு

கொழும்பு,மார்ச்22

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சராக சரத் அமுனுகம ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஐ.தே.கவில் இருந்து விலகி அரசில் சேர்ந்துகொண்ட சரத் அமுனுகம, நந்தா மத்தியூ ஆகியோருக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் விவரங்களை ஜனாதிபதி நேற்று அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து இருவரும் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றனர்.

சரத் அமுனுகமவிடம் அவரது அமைச்சுக்கு மேலதிகமாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், பனை அபிவிருத்திச்சபை, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம், வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை ஆகிய துறைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

கல்வி நிர்வாக சேவை வகுப்பு - III

## 68 பேரின் நியமனங்கள் ஒரு வருடத்தின் பின் ரத்து!

திருகோணமலை,மார்ச்22

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு - IIIக்கு நியமனம் பெற்ற வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 68 பேரின் நியமனங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

நியமனம் பெற்றவர்களுக்கு இது தொடர்பாக அனுப்பப்படவுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மீனவர் சுடப்பட்டார்

மட்டக்களப்பு,மார்ச்22

ஏறாவூர் - தளவாயில் பகுதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் தேசிய துணைப்படையான ராஸிக் குழுவினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தரான மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சிவலிங்கம் மனோகரன் (வயது 29) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவதினம் காலை மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற போதே குடும்பஸ்தரான இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-7-21)

### கிளிநொச்சியில் மேலும் 3 எலும்புக்கூடுகள்

வவுனியா,மார்ச்22

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியில் இருந்து நேற்றும் 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்காக அவை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உதயபுரம் பகுதியில் இருந்து ஏற்கனவே 35 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

(ஐ-7-164)

இப்பொழுது.....
உதயன்
இணையப் பதிப்பு
அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.
இணைய முகவரி :
www.uthayan.com

## பல்கலைக்கழக பதவிகளில் இருந்து பேராசிரியர் சிவசூரியா விலகினார்

### மருத்துவத்துறைக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்22

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட முதுநிலை பேராசிரியரும் பெண்ணோயியல் - மகப்பேற்றியல்துறைத் தலைவருமான விஞ்ஞானக் கலாநிதி எம்.சிவசூரியா யாழ். பல்கலைக்கழகம் தொடர்பான தமது பதவிகளை நேற்று இராஜினாமா செய்தார்.

இதன் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையும் அவரது நிபுணத்துவ சேவையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மருத்துவபீட பேராசிரியர் கொடுப்பனவுகள் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் காட்டி வரும் தவறான போக்கை கொள்கை ரீதியாக ஆட்சேபித்து அவர் நேற்று தமது இராஜினாமாக் கடிதத்தை அனுப்பியதாகத் தெரிகின்றது.

சர்வதேச ரீதியில் மருத்துவத் துறை போதனாசிரியர்கள் மட்டத்தில் உயர்ந்த நிலையில் - தரம் மிக்கவராக - மதிக்கப்படும் வைத்திய நிபுணர் சிவசூரியா யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பணியாற்றிய ஒரேயொரு முதுநிலை பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதியாண்டு கற்கைநெறி முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து

### மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்22

மகப்பேற்று நிபுணரான பேராசிரியர் எம்.சிவசூரியா தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளதால் விரைவில் நடைபெற விருந்த இறுதியாண்டு மருத்துவ மாணிப் பரீட்சையை நடத்த முடியாது போவதுடன் இறுதியாண்டு கற்கைநெறிகள் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

யாழ்.மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிரப்பமுடியாத பதவி வெற்றிடங்களுடன் யாழ். மருத்துவ பீடம் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் பல்கலைக்கழக நிர்வாகம் நடந்து கொள்ளும் விதம் மருத்துவ பீடத்தை மேலும் பாரதூரமாகப் பாதிக்கும் என்பது தெளிவு - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## இன்று சுமுகத் தீர்வு என்கிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,மார்ச்22

யாழ். மருத்துவபீட பேராசிரியர் எம்.சிவசூரியாவின் கொடுப்பனவு தொடர்பான கடிதம் இன்று காலை அவருக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படும் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இந்த விவகாரம் இன்று சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

(ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கலை விழாவும் அதிர்ஷ்டலாபச் சீட்டும் நிகழ்ச்சி ஒத்திவைப்பு

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திக்காக இன்று (22-03-2000) நடத்த இருந்த கலை விழாவும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வுகள் 16.09.2000 திகதியிலன்று இடம்பெறும். இத்திகதிவரை இதற்கான சீட்டுக்கள் விற்பனைக்குச் செல்லுபடியாகும்.

*தலைவர்,*
பழைய மாணவர் சங்கம்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.
(C/11485)

## ஆண்டு மிலேனியத்தில் அகவை ஒன்று!



**இளந்திரையன் (காண்டீபன்) – சசிரேகா தம்பதியினரின் அன்புப் புதல்வன்**

## ❊ செல்வன் கஜீபன் ❊

தனது 1ஆவது 'பிறந்ததினத்தை' இன்று (22-03-2000) புதன்கிழமை தனது ஜேர்மனி இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கஜீபனை இலங்கையிலுள்ள அன்புமிகு அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா மார், பெரியமாமா, பெரியத்தை, சித்தப்பா, சின்னத்தை, பிரான்சில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, வாசன் தாத்தாகுடும்பம், சுவிசில் இருக்கும் பெரியம்மா குடும்பம், சித்தி குடும்பம், கனடாவில் இருக்கும் பெரியம்மா குடும்பம், நிருபன் அண்ணா, கம்சிகா மச்சாள், யூட்டன், யூட்டிமார் அனைவரும் வைரவர் துணை கொண்டு நீடூழிகாலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

*மானிப்பாய் வீதி,*
*மருதனார்மடம்.*
(C/11489)
தகவல்:
*பொ. சண்முகநாதன்*

## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

* 05.03.2000 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

* எதிர்வரும் 28.03.2000 அன்று இங்கிருந்து படச்சுருள்கள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

புலோலி. T.P - 070-212720 நல்லூர். (74702)

### தடகளப்போட்டி

காரைநகர்,மார்ச்22

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் வேலணைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் தீவக இளைஞர் சேவை உத்தியோகத்தர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற உள்ளது. (ஐ-3-73)

### விளையாட்டு விழா

வலி.கிழக்கு,மார்ச்22

வலி.கிழக்கு பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டு விழா கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணி முதல் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-180)


## ராஜா

யாழ்ப்பாணம்

ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த

**படையப்பா**

காட்சிகள்
10.30, 2.30
(C/11349)

## நாகம்ஸ்

சுன்னாகம்
ரசிகர்களே
இன்று முதல்
ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா
நடித்த
**அம்மன்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களை பேய்களுக்காக கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த காட்சி
(74710)

## லிபேட்டி

அச்சுவேலி
பார்த்திபன், ப்ரீதா, வடிவேல்
நடிப்பில்
*காக்கைச் சிறகினிலே*
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*
(C/11493)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
16 - 04 - 1953



விண்ணில்
03 - 04 - 1999

அமரர்

## முருகேசு உதயகுமார்

(உரிமையாளர் இராசம் மோட்டார் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்)

திதி: 22.03.2000

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
எம் இதயத்தை விட்டு நீங்காமல் அன்பின்
திருவுருவாய், வாழ்வின் வழிகாட்டியாய்,
எங்களை வாழ வைத்து மீளாப் பயணம்
சென்ற எமது அன்புக்குரியவரே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

**உற்றார், உறவினர், நண்பர்கள்,**

இல.23, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்:- க.தியாகராஜா (மாமன்)
(74699)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 - 04 - 1926



மறைவு
08 - 04 - 1985

**அமரர் சின்னையா மார்க்கண்டு**

திதி: 22-03-2000

**தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*அன்பு மனைவி, சகோதரன்,*
*சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.*

*பிரதான வீதி,*
*சங்கானை கிழக்கு,*
*சங்கானை.*
(74589)

## அறிவித்தல்

### வாடகைக் கட்டணம் மீது தண்டம் அறவிடுதல்

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகைக் குடியிருப்பாளர்கள் 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான வாடகை நிலுவைப் பணம் முழுவதையும் 31.03.2000ஆம் ஆண்டுக்கு முன் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். இக்காலத்துக்குத் தண்டம் எதுவும் வழங்கப்படமாட்டாது. மேலும் 2000ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் குறித்த மாத வாடகைக் கட்டணத்தை அடுத்து வரும் மாதத்தின் 10ஆம் திகதிக்குள் செலுத்தப்படாதவிடத்து 10% தண்டம் உடன்படிக்கையின் 13ஆவது விதியின்படி அறவிடப்படும் என இத்தால் அறியத்தருகிறேன்.

வே.பொ.பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
21.03.2000
(C/11494)

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித்திங்கள் 12 ஆம் நாள் (25-03-2000) சனிக்கிழமை காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

*எமது சிரேஷ்ட புத்திரன்*
*திருநிறை செல்வன்*
**தயாபரன்**
(தயா)
B.Sc ஆசிரியர்
(பளை மத்தியகல்லூரி)
அவர்களை

*எமது சிரேஷ்ட புத்திரி*
*திருநிறை செல்வி*
**மலர்மகள்**
(கருணை)
B.A Dip. in Eng.
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
A.C.L.G Office, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கு

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

திரு.திருமதி P.புஸ்பரத்தினம் குடும்பத்தினர்
'தேவி வாசா'
பலாலி வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி மா.புவனேந்திரன் குடும்பத்தினர்
சாரண மாவட்ட ஆணையாளர்,
(அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகில்)
நீர்வேலி.

(இருவீட்டார் அழைப்பு) (74505)

## நன்றி நவிலல்

### திருமதி மகேஸ்வரி ஸ்ரீகரன்

அவர்கள் நோயுற்ற காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இணுவில் மேற்கு.
தகவல்:
குடும்பத்தினர்.
(74705)

### இராணுவத்தினர் வசமுள்ள வீடுகள்

# உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தால் படையினர் வாடகை செலுத்துவர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் வசமுள்ள வீடுகளுக்கு வீட்டு உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்காத காரணத்தினால் அவர்களுக்குரிய வாடகைக் கட்டணத்தை வழங்க முடியாதிருப்பதாக 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவத்தினர் வசமுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு வாடகைக்கட்டணம் வழங்கப்படவேண்டும் என்று மக்கள் குழுப் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலின் போது கோரிக்கை விடுத்தனர். அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரிகேடியர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரால் தமது தேவைக்கெனப் பல வீடுகள் பயன்படுத்தப் பட்டுவருகின்றன.

இந்த வீடுகளுக்குத் தத்துவ உரித்து (Power of Attoney) மற்றும் உரிய ஆவணங்களை வீட்டு உரிமையாளர்கள் சமர்ப்பித்தால் வாடகைக் கட்டணம் வழங்குவதற்குப் படைத்தரப்புத் தயாராக உள்ளது.

இந்த வகையில் சில வீடுகளுக்குப் படையினர் வாடகைக் கட்டணம் வழங்கி வருகின்றனர் — என்றார்.

இந்தக் கலந்துரையாடலின்போது மக்கள் குழுப் பிரதிநிதிகளினால் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் வருமாறு:

★ கப்பல், விமானப் போக்குவரத்துக்களின்போது அமுலில் உள்ள சோதனைக் கெடுபிடிகள் தளர்த்தப்படவேண்டும்.

★ கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடிப்பதற்கு வழங்கப்பட்ட நேரம், தூரம் போன்றவை நீடிக்கப்படவேண்டும்.

★ திவகம் மற்றும் காரைநகர்ப் பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் சோதனைச் சாவடிகளில் படும் சிரமங்கள் தளர்த்தப்பட வேண்டும்.

★ மீன்பிடித் தடையினால் கடந்த மூன்று மாத காலமாகக் கடலுக்குள் முடங்கிக் கிடக்கும் வலைகளை மீட்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

★ யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களைநிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ மருத்துவ தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடத்தி குடாநாடு முழுவதும் உள்ள மருத்துவ, தொழில்நுட்பஉத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

'ஒசுசலா' நிறுவனத்தின் கிளை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவி அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் அங்கே கிடைக்கச் செய்ய வேண்டும்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியை மீள இயங்கச் செய்ததுபோல தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தச் சந்திப்பில் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மாகாண ஆணையாளர் ஏ. ஸி. செபநாயகம், சு. பரமநாதன், வணபிதா ஈ. செல்வராசா, வணபிதா ஜெயக்குமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-5)

## பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட சைவ நெறிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் திவகக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

மேற்படி பரீட்சைக்கு அதிகளவிலான மாணவர்களைத் தோற்றச் செய்த மூன்று கல்லூரிகளுக்குமான பரிசில்களும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பன வழங்கப்படவுள்ளன. (ஐ-7)

## காரைநகர் அம்மன் ஆலயத்தில் 'நாத சமர்ப்பணம்' நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 22

காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவத்தில் இரண்டாவது நாளான இன்று பிரமோற்சவம் மிகச் சிறப்பாக இடம் பெறவுள்ளது —

பண்டிதர்பிரம்மஸ்ரீக.வைத்தீஸ்வரக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீநகுலேஸ்வரக் குருக்கள், இணுவில் வேத விற்பன்னர் சிவஸ்ரீ சிவபால சிவாச்சாரியார் ஆகியோர் கலந்து கொண்டு உற்சவத்தை நடத்துவர்.

இசைப் பேரறிஞர் சாவகச்சேரி எம். பஞ்சாபிகேசன் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட நாதஸ்வர — தவில் கலைஞர்கள் அளிக்கும் ''நாத சமர்ப்பணம்'' விசேட நிகழ்வாக இந்த உற்சவத்தில் இடம் பெறவிருக்கின்றது.

இந்த உற்சவத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது விவரங்களை மகாராணி சேரமுவுடன்தொடர்பு கொண்டு பயண அனுமதியைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## மாணவர்களிடையே இம்முறையும் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி

வலிகாமம் தெற்கு, மார்ச் 22

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலை மாணவர்களிடையே ஆண்டு தோறும் நடத்தி வரும் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி இம்முறையும் நடைபெற உள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே கலை, இலக்கிய ஆர்வம், ஆக்கத்திறன் ஆற்றல், கூட்டு முயற்சியில் குழுமுறைக் கற்றலை ஊக்குவித்தல், தொடர்பாடல் போன்றவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கையெழுத்துப் போட்டித் தொடரைக் கல்வித் திணைக்களம் வருடந் தோறும் நடத்தி வருகின்றது.

பாலர் கீழ்ப்பிரிவு, பாலர் மேற்பிரிவு, இடைநிலைப் பிரிவு I, II, III, கல்லூரி நிலைப் பிரிவு ஆகிய ஆறு பிரிவுகளில் தனித்தனி சஞ்சிகைப் போட்டி நடைபெறும்.

சிறந்த மூன்று சஞ்சிகைகளுக்குக் கோட்ட, வலய, மாகாண மட்டத்தில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

பாடசாலை மட்டத்தில் ஜூன் 30 ஆம் திகதிக்கும் கோட்ட மட்டத்தில் ஜூலை 30 ஆம் திகதிக்கும் வலய மட்டத்தில் ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கும் மாகாணமட்டத்தில் ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கும் முன்பாகப் போட்டிகள் நடைபெறும்.

சகல மாணவர்களையும் வகுப்பு ரீதியாக இப்போட்டிகளில் பங்குபற்றச் செய்ய வேண்டும் என வடக்கு — கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-152)

## காயமடைந்த கான்ஸ்டபிள் பலாலிக்கு

யாழ். இலுப்பையடிச் சந்திப்பகுதியில் கடந்த ஞாயிறன்று இனந் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

யாழ். பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஜெயானந்த (வயது 24) என்பவரே சைக்கிளில் வந்த இளைஞனின் பிஸ்ரல் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தவராவார். (ஐ-9)

## மலேரியா சிகிச்சை முகாம்

மலேரியா நோயைக் கட்டுப்படுத்த தெல்லிப்பழை சுகாதார சேவைப் பிரிவினர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாக மலேரியா தடுப்பு நடமாடும் சிகிச்சை முகாம் ஒன்றை நாளை வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு கந்தரோடை சப்பிரமணியம் சனசமூக நிலையக் கட்டடத்தில் நடத்த உள்ளனர். (ஐ-152)

# செய்திக் கொத்து

### மயானத்தில் பற்றைகள்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 22

புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது. அங்கு அடர்த்தியான முள்பற்றைகளும் செடி கொடிகளும் காணப்படுகின்றன.

சுடலைக்குச் செல்லும் வீதியும் குண்டும் குழியுமாக திருத்தப்படாமல் உள்ளது. (ஐ-133)

### கிளைக் குழு உறுப்பினர் தெரிவு

சண்டிலிப்பாய், மார்ச் 22

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 32 கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர்களின் தெரிவு அண்மையில் நடைபெற்றது. சங்கப் பொதுச் சபைக் கூட்டம் அடுத்தமாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான கடிதங்கள் தெரிவு செய்யப்பட்ட பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சங்கத்தின் பொது முகாமையாளர் பெ. கனகரத்தினம் தெரிவித்தார். (ஐ-135)

### விண்ணப்பம் ஏற்கும் நேரம்

கொழும்புத்துறை, மார்ச் 22

யாழ். மாவட்டம் தேர்தல் திணைக்களத்தில் வாக்காளர் இடாப்புப் பிரதி பெற வருபவர்களின் விண்ணப்பங்கள் காலை 9.00 மணிதொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா தெரிவித்துள்ளார். (ஐ - 30)

### மருத்துவ உபகரணம் கிடைத்தது

நெல்லியடி, மார்ச் 22

நோயாளர் நலன் கருதி யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் சளி, இரத்தம் உறிஞ்சி எடுக்கும் 'சக்கர்கள்' மந்திகை மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. (க - 109)

### சேவைநலன் பாராட்டு விழா

வலிகாமம் தெற்கு, மார்ச் 22

முப்பத்தைந்து வருடங்கள் ஆசிரிய சேவையாற்றி இளைப்பாறியுள்ள கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை ஆசிரியை திருமதி நாகமனோன்மணி நடராசாவின்சேவையைப் பாராட்டி கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கந்தரோடை வாழ் மக்கள் இணைந்து எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி வித்தியாசாலையில் அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் சேவை நலன் பாராட்டு விழாவினை நடத்த உள்ளனர். (ஐ-152)

### மாடிக்கட்டடம் நிறுவப்படுகின்றது

சண்டிலிப்பாய், மார்ச் 22

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் புதிய மாடிக் கட்டடம் நிறுவும் வேலைகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெற்றோர்களினதும், பழைய மாணவர் சங்கத்தினரதும் பங்களிப்புடன் இக் கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாகக் கல்லூரி அதிபர் நா. சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது மிகவும் பாதிப்புக்குள்ளான இக் கல்லூரியில் நூலகம், ஆய்வுகூடம், ஆரம்பப்பிரிவு என்பன இல்லாமல் இருக்கின்றன. அத்துடன் தற்காலிகக் கொட்டகைகளில் மாணவர்கள் சிரமத்துடன் கல்வி பயின்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-135)

### பிரிவுபசாரம்

சண்டிலிப்பாய், மார்ச் 22

பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பங்குகளின் பங்குத்தந்தையாக கடந்த நான்கு வருடகாலமாகப் பணியாற்றி கிளிநொச்சி மறை மாவட்டத்துக்கு இடமாற்றத்தில் செல்லும் அருட்திரு. அன்ரன் றோக் அடிகளாருக்கு சில்லாலை பங்கு மக்களாலும் அப்பகுதி பொதுநல அமைப்புகளினாலும் பிரிவு உபசார வைபவம் கடந்த வாரம் நடத்தப்பட்டது.

சில்லாலை புனித கதிரை மாதா ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் பி. ஞானசப் பிள்ளை, சில்லாலை இளைஞர் மன்றத் தலைவர் அன்ரன் ராஜ்குமார், சில்லாலை பங்குச் சபையின் செயலாளர் திருமதி சிசிலியா இராயப்பு ஆகியோர் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். (க-135)

### பாடசாலைக்கு நீரிறைக்கும் இயந்திரம்

வலி. கிழக்கு, மார்ச் 22

யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்திற்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கென பழைய மாணவரான டாக்டர் வை. தியாகராஜா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ஐ-180)

### இணைந்த சாரதி விபரம் சேகரிப்பு

வலி. தென்மேற்கு, மார்ச் 22

அரசாங்க சேவையில் உள்ள மோட்டார் வாகனச் சாரதிகளுக்கான இணைந்த சாரதிகளின் விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு வடக்கு — கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கையினை இணைந்த சேவைகள் பணிப்பாளர் கே. பி. எம். ஸ்பெல்ட்வின் வெளியிட்டுள்ளார். (ஐ-185)



# ஏழாலை அத்தியடி
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை ஆலய
# மகாகும்பாபிஷேகப் பெருவிழா
## சிறப்பு மலர்

22 - 03 - 2000

## ஏழாலையங்களில் ஒன்றான ஏழாலை புவனேஸ்வரி அம்மன்

சக்தி, சிவம் என இரு தன்மையாய் இருத்தலாலன்றே உலகம் முழுவதும் ஆண் பெண்ணென இருவகையாயும், நெருப்பும் சூடும் போலப் பிரிவிலாக்குண குணிப்பொருளாயும் விளங்க வைத்தனன் முதல்வன். இவ்வாழ்வுகளெல்லாம் சிவ, சக்தியால் வந்தனவே. இதனைச் சிவஞானசித்தியாரில் அவளால் வந்தவாக்கம் இவ் வாழ்க்கை எல்லாம் என்று எடுத்தாளப்படுகிறது. சிவபிரான் சக்தி வடிவம் எய்தியதால் உண்டானவையே அனைத்தும்.

இவ்வுயரிய உண்மையைக் கண்டுணர்ந்த முன்னோர் இறைவனை அம்மையாகக் கண்டு வணங்கி அருளும் பொருளும் பெற்று மகிழ்ந்து வாழ்ந்தனர்.

ஏழாலையங்களில் ஒன்றாக அமைந்த ஏழாலை புவனேஸ்வரி அம்பிகை ஆலயம் யாழ்ப்பாணப் புராதன ஆலயங்களிலொன்றாகத் திகழ்கின்றது. இவ்வாலயத் தோற்றம் மிக அற்புதமானது.

இந்த ஆலயம் அமைந்திருக்கும் மறாத நிலப் பிரதேசத்தில் முத்தரெனும் பெருமகன் தனது வயலில் உழும்பொழுது ஏரில் ஒரு பொருள் சிக்குண்டதாயும்: அவ்விடத்தை அகழ்ந்து பார்த்தபோது அம்பாளின் சிலா விக்கிரகம் காணப்பட்டதாகவும், பின்னர் அவ்விக்கிரகத்தை அந்த இடத்திலேயே முறைப்படி ஸ்தாபித்து, பொங்கல் பூஜை போன்றவற்றைச் செய்து வந்தாரென்றும் அறியக்கிடக்கிறது. முத்தர் சைவாசார சீலம் நிறைந்தவர். சைவ சந்தியாவந்தனம் தவறாதவர். புராணப் படிப்புக்களில் நல்ல ஈடுபாடுடையவர். இதனால் இவரது காலத்திலிருந்தே பொங்கல் பூசைகளுடன் புராண படனமும் இந்த ஆலயத்தில் நடந்து வரத் தொடங்கிற்று.

இந்த ஆலய நிர்வாகப் பொறுப்பு இன்று வரை முத்தர் பரம்பரையினரால் நடத்தப்பட்டு வருவது காணக்கூடியதாகவுள்ளது.

இந்த ஆலயக் கட்டட அமைப்பு ஆரம்பத்தில் கொட்டிலாக இருந்து பின்னர் சுண்ணாம்புக் கட்டடமாக மாற்றம் பெற்று இன்று வேதசிவாகம முறைப்படியுள்ளது. ஆலயம் எப்படி அமைக்கப்பட்டிருக்க வேண்டுமோ அப்படி அமைக்கப்பட்டிருப்பது இந்த ஆலயச் சிறப்பம்சமாகும்.

இந்த ஆலயத் திருப்பணிகளில் முன்னின்றுழைத்த தர்மகர்த்தாக்களான சிவசம்பு ஓவசியர், வயித்திலிங்கம் சிவப்பிரகாசம், சிற்றம்பல உபாத்தியாயர் போன்றோர் அம்பாளின் திருவருளுக்காட்பட்டு அவ்வப்போது தம்மாலியன்ற அருட்தொண்டுகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1964ஆம் ஆண்டின் பின் ஓவசியர் சிவப்பிரகாசம் இரத்தினம் இவ்வாலய நிர்வாகப் பொறுப்பை ஏற்று இவ்வாலயத்தில் செய்ய வேண்டிய பல திருப்பணி வேலைகளை நிறைவேற்றியுள்ளார். ஆலய உள்வீதி மண்டபமாக்கப்பட்டமை கொடிமரம், திருத்தேர், போன்ற இன்னோரன்ன பணிகளைத் தனது சொந்தப் பணத்தில் இறைவி திருவருளால் நிறைவேற்றியமையை இங்கு குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றோம்.

இவ்வாலயத்தில் நடைபெறும் விழாக்களில் மானம்பூ விழா மிக வெகு விமரிசையாகத் திருவருள் ததும்ப நடைபெறுவது வழமை. 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற மானம்பு அன்று அம்பாளின் பவுண் தங்க அணிகலன் திடீரென மறைந்து விட்டது. இதனால் கவலையுற்ற தேவஸ்தான தர்மகர்த்தாவான ஓவசியர் இரத்தினம் அம்பிகையிடம் இக்களவை ஒரு கிழமையினுள் வெளிப்படுத்தித் தா? என்று விண்ணப்பித்துக் கொண்டார். விண்ணப்பம் அம்பிகையின் திருச் செவியில் கேட்டுவிட்டது.

திருவருட் செயலாக இக்களவில் ஈடுபட்டவர் அம்பாளுக்குரிய அணிகலனைச் செய்து கொடுத்த யாழ். நகரிலுள்ள பொற்றொழிலாளியிடம் சென்று விற்பனை செய்யப் பேரம் பேசியபோது வகையாக மாட்டிக்கொண்டார். இது அம்பிகைக்கு முறையிட்ட 7 ஆம் நாளன்று நடைபெற்றது. களவு போன பொருள் மீட்கப்பட்டதறிந்து அம்பிகையின் பக்தர்கள் ஆனந்தக் களிப்பில் மூழ்கினர். இத்தகைய பல்வேறு அற்புதமெல்லாம் ஆற்றிவரும் அம்பிகை தனது ஆலயத் திருப்பணிகளை முட்டின்றி நிறைவேற்றுவதற்கு முத்தர் பரம்பரையின் காலத்துக்குக் காலம் ஒருவரை அமைத்துக்கொண்டும் உள்ளாள்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட இவ்வாலயத் திருப்பணியை யார் முன்னின்று செய்வார் என்று ஏங்கியபோது சம்பியா நாட்டில் தொழில் புரியும் முத்தர் பரம்பரை வழித்தோன்றலான முன்னைய தர்மகர்த்தாவின் மகன் திருப்பணிச் செல்வர் திரு. இரத்தினம் தேவகாந்தன் அவர்களை அம்பிகை இப்பணிக்கு ஆற்றுப்படுத்திய அற்புதம் சொல்லி மகிழ முடியாதவொன்று இவருக்கு அம்பிகையின் திருவருள் என்றும் அபரிமிதமாகச் சொரிய ஒருகணம் பிரார்த்திப்பது நமது பெருங்கடமையாகும்.

இன்று ஏழாலைக் கிராமத்தில் சகல வித திருக்கோயிலம்சப் பொலிவுகள் குறைவின்றி நிறைவுற அமைந்துள்ள பெருங்கோயிலாக இவ்வாலயம் அமைக்கப்பெற்று திருக்குடமுழுக்குக் காணும்பேறு பெற்ற நாமெல்லாம் பெரும்பேறு பெற்றவர்கள் என்று போற்றி அம்பிகைபாதம் பணிந்து இறைஞ்சி வாழ்த்தி மகிழ்வோமாக.

**சி. சக்திகிரீவன்,**
கௌரவ செயலாளர்,
இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்.

## நல்லை ஆதீனகுருவின் ஆசி

இன்று குடமுழுக்குக் காணும் ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் பழமையும், பெருமையும் நிறைந்த பதியில் அமைந்துள்ளது.

புவனத்திற்கு பதியாக இருந்து உலகுக்கு அருளை வாரி வழங்கும் அம்பிகை அறிவுக்கனலாயும் அருட் புனலாயும் அசைந்து அருளாட்சி புரிகிறாள்.

அவ்வன்னையின் திருக்குட முழுக்கில் கலந்துகொண்ட பக்தர்களும் திருப்பணியிலீடுபட்ட திருத்தொண்டர்களும் சகல சிறப்பும் பெற்று வாழ உலக மாதாவாகிய புவனேஸ்வரியம்பிகை பாதம் பணிந்து இறைஞ்சுகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள்.**

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்தில் அருள் கொழிக்கும் ஊர்களில் ஏழாலைக் கிராமம் முதன்மையானது. இக்கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் புவனேஸ்வரி அம்பிகையின் கும்பாபிஷேகம் சகல திருவருட் சிறப்புக்களுடனும் நடைபெறுவனதயிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இறையனுபூதி பெற்ற மகான்களின் காலடிபட்ட புனித ஸ்தலங்களே இன்று எமக்கு பாப நாச தலங்களாகத் திகழ்கின்றன.

இத்தகைய புனித தலங்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்கள் எமது மக்களின் விடிவிற்கு வழிசமைக்கும் என மனதார நம்புகின்றேன். இப்புனித பெருஞ்சாந்தி விழா சிறப்புடன் அமைய அம்பிகையைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**ஆ. மகாலிங்கம்.**
பிரதேசச் செயலாளர், உடுவில்.

## பிரதிஷ்டா குருவின் ஆசி

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே யென்று மூவாமுகுந்தற் கிளையவளே
மாத்தவளே யுன்னையன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே!

மனிதனை சமய நம்பிக்கையுடனும் அமைதியுடனும் ஆத்மீக பலத்துடனும் ஒழுக்கத்துடனும் சகல செல்வங்களுடனும் வாழத் துணை நிற்பது ஆலய வழிபாடாகும். கோயில்கள் சமயநெறி தழைத்தோங்க வழிகாட்டுபவையாக இருப்பதனால் யாழ்ப்பாணத்தில் கிராமங்கள் தோறும் கோயில்கள் எழுந்தன. பிறசமய பிரசாரங்களால் எமது சமயநெறி தளர்வுறாது வளர்ச்சி பெறுவதற்கு ஆலயங்களே துணை நிற்கின்றன.

ஏழாலைப் பதியிலே சைவநெறி தழைத்தோங்கவும் சைவப் பெரியார்களை உருவாக்கவும் ஆலயங்களே துணை நின்றன. இவ்வகையில் புங்கடி என்னும் பதியிலே பார்வதி பரமேஸ்வரர் வீற்றிருப்பது போன்ற தோற்றத்துடன் பரமேஸ்வரர் ஆலயத்துக்கு இடப் பக்கமாக இருந்து பதினான்கு உலகங்களையும் தனது கடைக்கண் பார்வையால் அணைத்து காத்து அருளி சைவநெறி தழைத்தோங்கச் செய்து வருகின்ற அன்னை புவனேஸ்வரி தேவிக்கு இன்று புனருத்தாபன மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

ஆலயங்கள் சிதைவுறும் பொழுது பழுதடையும் பொழுது அவற்றை மீண்டும் திருப்பணிகள் மூலம் புதுப்பொலிவு பெறச் செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துவது தெய்வீகப் பணியாகும். இவ்வாலயம் இன்று திருப்பணிகள் மூலம் புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண்கின்றது. இதன் மூலம் எமக்கு நேர்ந்துள்ள இன்னல்கள் துயரங்கள் யாவும் நீக்கிப் புதுவாழ்வு ஏற்படும் இவ்வாலய திருப்பணி வேலைகளை முன்னின்று நிறைவேற்றியோருக்கும் அம்பிகையின் அடியார்களுக்கும் நல்லாசியினை வேண்டி அன்னை புவனேஸ்வரியைப் பிரார்த்திப்போமாக! ''லோகா சுகினோ பவந்து''

**பிரதிஷ்டா குரு**
**சிவஸ்ரீ ச. வரதராஜக்குருக்கள்.**

## ஆலய அர்ச்சகரின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பழம்பதியாம் ஏழாலையில் கருணாமூர்த்தியாய் காட்சி தருபவள் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி. எங்கும் நிறைந்து இன்ப அருள் சுரக்கும் எமதன்னைக்கு இன்றைய தினம் கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நடைபெறுகின்றது. உயிர்களிலெல்லாம் சக்தியாய் ஒளிவீசும் உலக மாதாவுக்கு கும்பாபிஷேகம் நிகழ்த்தவேண்டும் என்று செயற்பட்ட சைவ அபிமானிகளையும், அம்பிகை அடியார்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த அருமையான தினத்தில் அன்னையருளாலே அவள்தாள் பணிந்து அனைவருக்கும் தெய்வ ஆசி வேண்டி நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலவ பிரார்த்தித்து அமைகிறேன்..

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

**தி. பாலசுப்பிரமணியக்குருக்கள்**
அர்ச்சகர்
புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
ஏழாலை.

## ஆலய நிர்வாகம் விடுக்கும் செய்தி

ஏழாலை புவனேஸ்வரி அம்பாளின் ஆலயத் திருப்பணிகளிலும், மஹாகும்பாபிஷேகத்திலும் முன்னின்றுஉழைத்த அனைத்துப் பெருமக்களுக்கும் சகல நலன்களும் கிடைக்க அம்பிகையின் பாதங்களை இறைஞ்சி வணங்குகிறோம்.

**க. சிவப்பிரகாசம்**
புவனேஸ்வரி அம்பிகை ஆலய
நிர்வாகத்தின் சார்பில்.


கும்பாபிஷேக நன்னாளில்
அன்னையின் அருள்வேண்டி நிற்பவர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ரீ. எஸ். சுந்தரம்ஸ், 13, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | செனித் வாச் வேக்ஸ், இல. 1, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | ஜெயகிருஷ்ணா, 20, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். | ஹப்பி எலெக்ரிக்கல்ஸ். கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | ராஜா கொம்பிளெக்ஸ். 76, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். |
| ஸ்ரீ அம்பாள் றேட்ஸ், 80(32), கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். | துவாரகாஸ், 22, கே.கே.எஸ், வீதி, சுன்னாகம். | ராஜா மெடிக்கல்ஸ். (மருந்துக்கடை) காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். | சர்மிளா கொம்மியூனிக்கேசன், ஏழாலை தெற்கு, மயிலங்காடு. | ஜெயதுர்க்கா தொலைபேசிச் சேவை, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். |

# கிளின்ரனைக் குறிவைத்து நாள்கு தற்கொலையாளிகள்!

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனைக் குறிவைத்துக் காஷ்மீர் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த நான்கு தற்கொலையாளிகள் புதுடில்லிக்குள் ஊடுருவியுள்ளதாகத் தகவல் கிடைத்திருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் தலிபான் அமைப்பினருக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துக்கேட்டபோது தற்கொலையாளிகள் குறித்த தகவல் தெரியவந்ததாக இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்துக் கிளின்ரனின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளபடையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-6-9)

# சிரிய நாட்டு அதிபரை பில் கிளின்ரன் சந்திப்பார்

டொமாஸ்கஸ் மார்ச் 22

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான உறவுகள் சுமுக நிலைக்கு வரவேண்டுமானால் கோலான்குன்றுப் பகுதியில் இருந்து இஸ்ரேலியப்படையினர் வெளியேற வேண்டும் என்று சிரியா மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

இந்தப்பிரச்சினை தொடர்பாக சிரிய அதிபருடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜெனீவாவில் பேச்சு நடத்த உள்ளதாக அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் தெரிவித்துள்ளதை அடுத்து சிரியா இவ்வாறு வலியுறுத்தி உள்ளது.

தனது தெற்காசிய விஜயத்தின் ஒருபகுதியாக நேற்று முன்தினம் பங்களாதேஷ் சென்ற கிளின்ரன் தலைநகர் டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசும்போது ஜெனீவாவில் சிரிய அதிபரைச் சந்திப்பது பற்றிய தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான சமாதானப் பேசசுகள் — நான்கு ஆண்டுகளின் பின்னர் — மீண்டும் ஆரம்பமாகின. ஆனால் கோலான்குன்றுப் பகுதியை சிரியாவிடம் ஒப்படைக்க இஸ்ரேல் மறுத்ததை அடுத்து இந்தப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா முன் முயற்சிகளை எடுத்து வருகிறது. (ஐ—6)

# சென்னை அமெரிக்கத் தூதரகம் முன் தடையை மீறி ஆர்ப்பாட்டம்; ஈழ ஆதரவாளர்கள் கைது!

சென்னை, மார்ச் 22

**அமெரிக்க அதிபர் கிளின்ரனின் இந்திய விஜயத்தை எதிர்த்து சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற நூற்றுக்கும் அதிகமான தமிழீழ ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.**

தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்பு அமைப்பினரின் ஏற்பாட்டில் நடைபெற இருந்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு பொலீஸார் அனுமதி வழங்க மறுத்ததுடன் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு தடையும் விதித்தனர்.

ஆனால் பொலீஸாரின் தடையையும் மீறி பழ. நெடுமாறன் தலைமையில் வள்ளுவர் கோட்டத்தில் ஒன்று திரண்ட ஆயிரக்கணக்கான தமிழீழ ஆதரவாளர்கள் அங்கிருந்து ஊர்வலமாக அமெரிக்கத் தூதரகம் நோக்கிச் சென்றனர்.

தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்ட வேளையில் அவர்களில் 159பேரைப் பொலீஸார் கைதுசெய்து தடுத்து வைத்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் அன்றிரவே விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் — தமிழ்மக்களுக்கு எதிரான போருக்கு ஆதரவாக—அமெரிக்கா ஸ்ரீலங்கா அரசுக்கு உதவி வழங்குவதைக் கண்டித்து இந்த ஆர்பபாட்ட ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுப. வீரபாண்டியன் தேனிசைச் செல்லப்பா, 'விடுதலை' இராமச்சந்திரன் உட்பட பல தமிழீழ ஆதரவாளர்களான பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ஐ-6-9)

# காந்தி சமாதிக்கு அஞ்சலி

புதுடில்லி, மார்ச் 22

அமெரிக்க அதிபர் கிளின்ரன் நேற்று ராஜ்கோட்டில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் நினைவாலயத்துக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். (ஐ-6-9)

# இந்தியர்கள் பிரிட்டன் வருவதற்கு பிணைப்பணம் தேவையில்லை

## புதிய திட்டம் குறித்து விளக்கம்

லண்டன், மார் 22

பிரிட்டனுக்குப் பயணம் செய்யும் தெற்காசியர்கள் 'விஸா' பெறுவதற்கு முன்னர் பிணைப்பணமாக 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களைச் செலுத்தவேண்டும் என்ற சட்டம் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்குப் பொருந்தாது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் நாடாளுமன்றில் நேற்று இதனைக் கூறினார்

வேறு ஒருசில நாடுகளில் இருந்துவரும் பயணிகளுக்கு மட்டுமே இந்தக் கட்டுப்பாடு தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

தெற்காசிய நாடுகளில் இருந்து வரும் பயணிகள் பலர் பிரிட்டனுக்குள் நுழைந்த பின்னர் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் செல்வதில்லை என்று தெரிவித்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாகப் பிரிட்டன் முன்னர் அறிவித்திருந்தது.

இதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. பிரிட்டன் அவ்வாறான திட்டத்தை நடைமுறைப் படுத்தினால் அதேபோன்ற தொரு திட்டத்தை இந்தியாவும் நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்படும் என்றும் அது கூறி இருந்தது.

இதனை அடுத்துப் பிரிட்டன் தனது திட்டம் தொடர்பாகத் தற்போது விளக்கமளித்துள்ளது. (ஐ-6-9)

# கிளின்ரன் தங்கியுள்ள பகுதியில் கைத் தொலைபேசிக்குத் தடை!

புதுடில்லி, மார்ச் 22

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அமெரிக்க அதிபர் கிளின்ரன் தங்கி உள்ள மௌரியா ஹோட்டலைச் சுற்றி உள்ள மூன்று கிலோ மீற்றர் பிரதேசத்துக்குள் கைத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கைத் தொலைபேசி அலைவரிசைகளைப் பயன்படுத்தி 'ரிமோட் கொன்ரோல்' மூலம் இயக்கும் குண்டுகளை வெடிக்க வைக்கச் செய்ய முடியும் என்று கிளின்ரனின் பாதுகாப்புப் பிரிவினர் கருதுவதனால் கைத் தொலைபேசியைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹோட்டலைச் சுற்றி உள்ள மூன்று கிலோ மீற்றர் பிரதேசத்துக்குள் கைத்தொலைபேசிகளைப் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தடையை மீறிப் பயன்படுத்துவோரின் தொலைபேசி அலைவரிசைகள் இடைமறிக்கப்பட்டு முடக்கப்படுகின்றன— என்றும் கூறப்படுகின்றது. (ஐ-6-9)

## சொர்க்கம் செல்லும் ஆசை:

# தேவாலயத்துக்குள் தீமூட்டி 400 பேர் கூட்டுத் தற்கொலை!

கம்பாலா, மார்ச் 22

உகண்டாவின் கனுங்கு என்ற கிராமத்தில் சொர்க்கத்துக்குச் செல்லும் ஆசையினால் தேவாலயம் ஒன்றினுள் தீமூட்டி ஒன்றாகத் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 400 ஆக அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுவதாக உகண்டா செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக இவ்வாறு இறந்தவர்களின் எண்ணிக்கை 235 ஆக இருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவாலயத்தில் அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதிலமடைந்து கிடக்கும் மனித எச்சங்களை ஆராய்ந்தபோது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 400 க்கும் அதிகமானதாக இருக்கும் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

'ஆண்டவரின் பத்துக்கட்டளைகளை மீண்டும் அமுல் படுத்துவதற்கான இயக்கம்' என்ற கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்த இவர்கள் அனைவரும் 'உலகம் அழியப் போகிறது; அதற்கு முன்னர் நாம் சொர்க்கத்துக்குச் செல்வோம்' என்ற மூடநம்பிக்கையில் தமக்குத் தாமே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ 6 9)

## ஜம்மு - காஷ்மீரில் கோரச் சம்பவம்

# சீக்கியர்கள் 35 பேர் நேற்று சுட்டுக் கொலை!

## கிளின்ரன் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவின் ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில் அனந்தநாக் மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றின் மீது நேற்றுக் காலைஇனந்தெரியாத ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 35 சீக்கிய இனத்தைச் சேர்ந்த ஆண்கள் உயிரிழந்தனர். மேலும்பலர் படு காயமடைந்துள்ளனர்.

காலை வேளையில் இடரெனக் கிராமத்தைச் சுற்றி வளைத்த ஆயுததாரிகள் வீடுகளில் இருந்த ஆண்கள் எல்லோரையும் வெளியே வருமாறு அழைத்தனர். பின்னர் அவர்களை ஒரே இடத்தில் ஒன்று சேருமாறுபணித்துவிட்டு அவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் 34 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

40 முதல்50 பேர் கொண்ட ஆயுதக் குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் இவர்களில் பலர் வெளிநாட்டுக்கூலிப்படையைச்சேர்ந்தவர்கள் என்றும் பொலீஸார் கூறியுள்ளனர்.

ஆயுததாரிகள், நடத்திய இந்தத் தாக்குதலை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் கண்டித்துள்ளார். (ஐ-6-9)

## உலக அரங்கில்

# பாண்டிச்சேரியில் புதிய முதல்வர் இன்று பதவியேற்பு

சென்னை, மார்ச் 22

பாண்டிச்சேரி மாநிலத்தின் புதிய முதலமைச்சராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி. சண்முகம் இன்று பதவியேற்க உள்ளார்.

மாநில துணைநிலை ஆளுநர் திருமதி ரஜனிராய் இதனை அறிவித்துள்ளார்.

பாண்டிச்சேரியில் ஆட்சியில் இருந்த தி. மு. க அரசு அதன் கூட்டணிக் கட்சியான த.மா.கா ஆதரவை விலக்கிக் கொண்டதை அடுத்து கடந்த வாரம் இராஜினாமாச் செய்தது அதைத் தொடர்ந்து காங்கிரஸ், த.மா.கா, அ.தி.மு.க, இந்திய கமியூனிஸ்ட் கட்சி ஆகியன இணைந்து அங்கு கூட்டணி அரசை அமைக்க உள்ளன. (ஐ-6-9)

## ஈரானில் இருந்து இந்தியாவுக்கு

# நிலத்தடி எண்ணெய்க் குழாய்கள்; பாக். ஊடாக அமைக்க இணக்கம்

தெஹ்ரான் மார்ச் 22

பாகிஸ்தானுக்கு ஊடாக ஈரானில் இருந்து இந்தியாவுக்கு எண்ணெய் கொண்டு செல்வதற்கான குழாய்களை அமைப்பதற்குப் பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஈரானில் நடைபெற்ற எண்ணெய் வளத்துறை ஒத்துழைப்பு மாநாட்டில் பாகிஸ்தான் பிரதிநிதி இதற்கான உறுதிமொழியை வழங்கினார்.

ஈரானில் இருந்து நிலத்துக்குக் கீழான குழாய்கள் மூலம் எண்ணெயை இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்காக இந்த உத்தேசத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது சப்பல் மூலமே இந்தியாவுக்கு எண்ணெய்கொண்டு வரப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-9)

# வெளிமாவட்டம் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மார்ச். 22

யாழ் குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 21 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு

**சங்கானை**

(134766ஏ), (134766பி), (135828 ஏ), (138118 ஏ), (138135 ஏ), (138524 ஏ),

**கோப்பாய்**

(134023 ஏ), (134023பி), (134158 ஏ), (134158 பி), (134158 சி).
(134181 ஏ).(134193ஏ), (134193 பி), (134193 சி), (134193 டி), (134193 ஈ), (136236பி), (136 284 ஏ), (136456 ஏ), (136456 பி), (135502 ஏ), (13670 9 ஏ), (136709 பி,,

**நல்லூர்**

(133588ஏ), (131604ஏ), (135879ஏ), (138155ஏ), (139823ஏ), (138845ஏ),

**சண்டிலிப்பாய்**

(135524ஏ), (135524பி), (135524சி), (135746ஏ), (135764பி), (135764சி), (135746டி), (135964ஏ), (138187ஏ), (138187பி), (138256ஏ), (138320ஏ), (138321ஏ)

**தெல்லிப்பழை**

(136236ஏ), (138671ஏ),

**உடுவில்**

(134228ஏ), (136321ஏ), (136321பி), (136332ஏ), (136332பி). (136335ஏ). (136335பி), (136346ஏ), (136356ஏ), (129344ஏ). (129344பி), (135726ஏ), (135726பி), (135727ஏ), (135727பி), (135727சி), (135727டி), (138126ஏ), (138314ஏ), (138314பி), (138314சி), (138314டி), (138420ஏ), (138444ஏ). (139571ஏ), (139690ஏ). (க)

## பதினொரு நிலையங்களில்
# தட்டெழுத்தாளர் பரீட்சை சனியன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். குடாநாட்டில் 11 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கான பரீட்சை நிலையங்கள் தீவகக்கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய நான்கு கல்வி வலயங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அமைக்கப்பட்ட நிலையங்கள் வருமாறு:-

★ யாழ். இந்து மகளிர் கல்லூரி 2 நிலையங்கள்.
★ யாழ். இந்துக் கல்லூரி — 3 நிலையங்கள்.
★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி — ஒரு நிலையம்.
★ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி — ஒரு நிலையம்.
★ பருத்தித்துறை வேலாயுதம் ம.வி — ஒரு நிலையம்.
★ பளை மத்திய கல்லூரி— ஒரு நிலையம்.

இதேவேளை —

ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் தற்பொழுது பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே அனுமதி அட்டைகளில் ஹாட்லிக் கல்லூரி என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வட. இந்து மகளிர் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# புத்தகம் கட்டும் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 22

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திறன்விருத்தி மையத்தினால் சுயதொழில் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் புத்தகம் கட்டும் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டணம் இன்றி மூன்று மாதங்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஜி.சி.ஈ, சாதாரண தரம் வரையும் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

தகுதியுடையோர் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு தமது விண்ணப்பங்களை 'செயலாளர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

# மலசல கூடங்கள் புனரமைப்பு

வலி.கிழக்கு, மார்ச் 22

கோப்பாய் மகாவித்தியாலய மாணவர்களின் நலன் கருதி ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 4 லட்சம் ரூபா செலவில் புதிய மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்நிறுவனம் சேதமுற்றிருந்த மலசல கூடங்களில் சிலவற்றைப் புனரமைத்தும் சிலவற்றைப்புதிதாக அமைத்தும் கொடுத்துள்ளது.

இதேவேளை —

இந்நிறுவனம் போரினால் சேதமுற்ற வகுப்பறைக் கட்டடங்களையும் பல லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்து வழங்கியுள்ளதாக பாடசாலை அதிபர் அ. அகிலதாஸ் தெரிவித்தார் — (ஐ-180)

# கருத்தரங்கு

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளுக்கான செயற்திட்ட வேலைகள், ஒப்படை ஆகியன தொடர்பான கருத்தரங்கு கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை யாழ். வலயக் கல்விப்பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட மேற்படி விடயம் தொடர்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், வளஆளணியினர், அதிபர்கள், குறிப்பிட்ட பாட ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-10).

# தவறவிட்ட பென்ரன்

நெல்லியடி, மார்ச் 22

மந்திகை மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கண்டெடுக்கப்பட்ட சிறிய 'பென்ரன்' ஒன்று நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டோர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு, நிர்வாக உத்தியோகத்தர் கே. பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (ஐ-109)

# பாலர் கல்விக்கு இங்கு உரிய வசதிகள் செய்யப்படவில்லை

## கலை விழாவில் பிரதேச செயலர் உரை

வலிகாமம் தெற்கு, மார்ச் 22

"உலக நாடுகள் பலவற்றில் குழந்தைகளுக்கான கல்விக்கு பல வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன ஆனால் எமது பிரதேசத்தில் பிள்ளைகள் கல்வி பயில்வதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் மிகக் குறைவாகவே உள்ளன. யுத்தச் சூழ்நிலை, பாதுகாப்பின்மை, போதிய போஷாக்குணவு இன்மை போன்ற பல்வேறு நிலைகளில் பிள்ளைகள் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். சிறுவர் உரிமைகள் பற்றிப் பேசப்படும் இக்காலத்தில் பிள்ளைகள் கல்விகற்கும் உரிமையைப் பெறுவதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்".

வலிகாமம் தெற்கு சன சமூக நிலையங்களின் சமாசமும், முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனார்மடத்தில் இயங்கிவரும் யூனியன் கல்லூரி மண்டபத்தில் இக் கலைவிழா நடைபெற்றது.

வலிகாமம்தெற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி இ மோகனா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதேச செயலர் மேலும் கூறியதாவது:-

எமது குழந்தைகளே எமது சமுதாயச்செல்வங்கள். எதிர்கால சமுதாயத்தினை அலங்கரிக்கும் சிற்பிகள். அவர்களை நல்ல முறையில் வளர்த்து, கல்வியூட்டி, வழிப்படுத்த வேண்டும். முன்பள்ளிகளை அமைத்து அங்கு அவர்களுக்குக் கல்விக்கான அறிமுகத்தை ஏற்படுத்த வேண்டும். எமது கலை, கலாசார விழுமியங்களைப் பேணக்கூடிய முறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். எதிர்கால சமுதாயம் சிறப்பாக அமைய நாம் மேற்கொள்ளும் முயற்சிகளே அடிகோலாக அமைய வேண்டும் — என்றார்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி உரையாற்றுகையில் கூறியதாவது;

இன்று நடைபெற்ற இந்த விழா ஒரு முன்னோடித் திட்டமாகும். முன்பள்ளிகளில் பயிலும் சிறுவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் அவற்றை வளர்த்தெடுப்பதற்கும் ஏற்ற ஒரு களமாக இம்முன்னோடித் திட்டம் அமைந்துள்ளது. இக்கலை விழாக்களை நடத்துவதன் மூலம் சிறுவர்களிடையே அச்ச நிலையைப் போக்கி ஒற்றுமை, சமாதானம், சேர்ந்து வாழும் மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்த முடியும்.

இப்படி அவர் கூறினார். (ஐ-152)

# மெய்வல்லுநர் போட்டி

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு வித்தியாலய அதிபர் கவிமணி சு. ஆனந்தராசா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கோப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் அ. நல்லதம்பி, உரும்பிராய் அரிமாக் கழகத் தலைவர் இ. நடராஜா, ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி க. சிங்கராசா ஆகியோர் கலந்து கொள்வர். (க-30)

★ ★ ★

யாழ் சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. இராஜகோபால் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ - 4)

★ ★ ★

யாழ். நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்தின் இல்ல தடகளப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புனித நீக்கிலஸ் விளையாட்டுமைதானத்தில் அதிபர் க. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற உள்ளது.

நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் யே. யேசுதாசன் முதன்மை விருந்தினராகவும் யாழ். மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஆர், சி. எக்ஸ். நேசராஜா அடிகள், யாழ். கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ -15)

# வசந்த மண்டபத்துக்கு அடிக்கல்

தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலயத்தில் 5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் வசந்தமண்டபக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் து. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் மேற்படி ஆலய பிரதமகுரு துன்னாலை சிவஸ்ரீ அ. ரவீந்திரசர்மா உட்பட இன்னும் பலர் கலந்து கொள்வார்கள்.

புலோலி தெற்கைச் சேர்ந்த க. வேலுப்பிள்ளை குடும்பத்தினரின், அனுசரணையில் இந்த வசந்த மண்டபம் அமைக்கப்படவிருக்கின்றது (ஐ-109)

# உடற்பயிற்சிப் போட்டி

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் கல்விக் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளதாக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி நெடுந்தீவுக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் 25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு ம. வித்தியாலய மைதானத்திலும் —

வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு புங்குடுதீவு ம. வித்தியாலய மைதானத்திலும் —

ஊர்காவற்றுறைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் 28 ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திலும்— நடைபெறவுள்ளன.

வலய மட்டப் போட்டிகள் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். ஏ. ஒஸ்வேல்ட், ஆசிரிய ஆலோசகர் எம். லோகநாதன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-7)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்

பொதுக் கலைமாணி
பகுதி — II 1997/98

வணிகமாணி
பகுதி — II 1997/98

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் சித்திரை மாதப் பிற்பகுதியில் நடைபெறவுள்ளன. எனவே இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கி கிளையில் ரூபா 15 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

வவுனியா வளாகத்தில் பரீட்சை எழுத விரும்புவோர் அங்கு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து வளாகத்தில் சமர்ப்பிக்கலாம்.

பிரதான பாடமாக சங்கீதம் / நடனத்துக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதைக் கவனத்திற் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் 2000—04—16 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
[சி/11488]

உதயன்

## மக்கள் கருத்து அறிக!

யாழ். பஸ் நிலையத்துக்கு உரிய அலுவலகக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இந்தக் கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கு இடைஞ்சலாக இருந்த — சட்ட விரோத — விதியோர — நடைபாதைக் கடைகளை அகற்றும் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுமுகத் தீர்வு கண்டிருப்பதாக அறிய முடிகிறது.

அமைக்கப்பட இருப்பது வட மாகாணத்தின் தலைநகரின் பஸ் நிலையம் என்பதை, அதற்கான திட்டங்களைத் தயாரிக்கும் அதிகாரிகள் மனத்தில் கொள்வது அவசியம்.

ஆகக் குறைந்தது அடுத்த இரு தசாப்த காலத்திற்காவது வடக்கு மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு மத்திய பஸ் நிலையக் கட்டடமாக அது அமையப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு மக்களின் மத்திய பஸ் நிலையம் அமைவதற்குத் தேவையான இடப்பரப்பை தற்போதைய பஸ் நிலையம் கொண்டிருக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

எனவே உள்ள நிலத்தை அதிகளவு பயன்தரத் தக்க வகையில் பயன்படுத்துவது — அதற்குரிய முறையில் திட்டமிட்டுச் செயற்படுவது — எல்லாமே அதிகாரிகளின் திறமையில் தான் தங்கியுள்ளன.

பஸ் நிலைய நிலத்தில், போனால் போகின்றது என்ற எண்ணத்தில் — கிடைத்த நிதிக்கு இயன்றது இதுதான் என்ற பாணியில் — ஏனோ தானோ என்று — ஒரு கட்டடத்தைக் கட்டி விட்டுப் போவது நல்லதல்ல. அப்படிச் செய்வது தற்போது அமையப் போகும் கட்டடத்தையும் பயனற்றதாக்கி எதிர்காலத்தில் யாழ். பஸ் நிலையத்தைச் சிறந்த முறையில் இயங்கச் செய்வதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இடைஞ்சலாகி விடும்.

ஏற்கனவே பஸ் நிலையத்தின் ஒரு புறப் பகுதி பாவிக்க முடியாததாகத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக உள்ளது. அந்தத் தடையைத் தற்காலிகமானது என்று புறக்கணித்தாலும், எஞ்சிய பகுதியை உச்ச முறையில் பயன்படுத்துவதற்குரிய திட்டங்களைச் சரியான வகையில் தீட்டிச் செயற்படுத்துவது அவசியம்.

கோண்டாவில் டிப்போவில் செயற்படும் அலுவலகப் பிரிவுகளை யாழ். பஸ்நிலையத்துக்குக் கொண்டு வந்து, இங்கு இட நெருக்கடி ஏற்படுத்துவதை விடுத்து —

கீழே — தரைப் பகுதியில் — பஸ்கள் தரித்து நின்று, பயணிகளை ஏற்றி இறக்கக் கூடியதாக — தரிப்புகளுக்கு இடம் ஒதுக்கி — மேல் மாடியில் பஸ் நிலையத்துக்கு அத்தியாவசியமான அலுவலகப் பகுதிகள் மற்றும் இன்னோரன்ன பகுதிகளைக் கட்டி —

உச்சப் பயன்பாட்டைப் பெறலாம்.

கட்டட அமைப்புக் குறித்து சம்பந்தப்பட்டோர் முடிவு செய்ய முன்னர் இது குறித்துப் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள், நலன் காக்கும் பிரிவுகள் போன்றவற்றின் கருத்துக்கள், ஆலோசனைகளைக் கோருவது — பெறுவதே— உகந்த வழி.

அதிகாரிகள் தாம் தயாரித்துள்ள உத்தேச கட்டட அமைப்புத் திட்டம், வரைபடம் போன்றவற்றை மக்கள் பார்வைக்கு முன்வைத்து அவர்களின் கருத்துக்களையும் அறிந்து கொள்வது சாலச்சிறந்தது — பஸ் நிலையத்தை பயன்படுத்துபவர்கள் மக்களே என்பதால்.

# தமிழ்மொழி மூலமான கல்விமுறை

# மிக மோசமான நிலையில் உள்ளது

## சதாபிஷேகப் பெருவிழாவில் துர்க்கா துரந்தரி கவலை

யாழ்ப்பாணம், மார்ச், 22

தமிழ்மொழி மூலமான கல்வி இன்றுமிகவும் படுமோசமான நிலைக்கு வந்துள்ளது. இந்த நிலையைச் சீராக்க சகலரும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும் என்று கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் ஞாயிறு நடந்த இலக்கணவித்தகர் நமசிவாய தேசிகரின் சதாபிஷேகப் பெருவிழாவில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அன்றுகாலை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்ற சதாபிஷேக சாந்தி நிகழ்வை அடுத்து தேசிகர் தம்பதியினர் ஊர்வலமாகக் கூட்ட மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடந்த இந்த விழாவில் தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

பல பாடசாலைகளில் கரும்பலகையில் ஆசிரியர்கள் எழுதும் வசனங்களிலேயே இலக்கணப் பிழைகள் காணப்படுகின்றன. இதை நோக்கும் போது தமிழ்க்கல்வி எங்கே போகின்றது என்று சிந்திக்க வைக்கின்றது. இந்த நிலை மாற வேண்டும்.

நமசிவாயம் ஐயா மாணவர்களுக்கு வழங்கிய கல்வி முறையை நான் அறிவேன். தொல்காப்பியத்தை நான் அவரிடம்தான் கற்றேன்.

இலக்கணத்தில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தை நாங்கள் அறிவோம். கல்வி வாழ்வு அறிவுவாழ்வு. அதிலும் அறிவிலே தெளிவு என்பனவற்றை அவரிடம் இருந்து பெறக்கூடியவாய்ப்பு நமக்குக் கிடைத்தது. அவருக்கு எடுக்கப்பட்ட இந்தவிழாவை நாங்கள் பாராட்டுகின்றோம் — என்றார்.

### துணைவேந்தர்

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தமது தலைமையுரையில் கூறியதாவது:-

நாங்கள் எங்களது இலக்கண இலக்கிய பாரம்பரியத்தைத் தொலைத்து விட்டோம். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு கால பாரம்பரியம் எமக்கு உண்டு. ஆறுமுகநாவலருக்கு முன் சங்கிலியன் ஆட்சியில் இந்த சித்த வைத்தியம் இருந்துள்ளது. இவற்றையெல்லாம் தேடி எடுத்து 2500 ஆண்டு தமிழ் வரலாற்றை எழுத பல்கலைக்கழகம் முயற்சி செய்கிறது.

எமது மத்தியில் வாழும் மிகப்பெரிய தமிழறிஞராக கல்விப் பாரம்பரியத்தின் பங்காளியாக இலக்கண வித்தகர் நமசிவாயம் ஐயா விளங்குகின்றார். யாழ். பல்கலைக்கழகம் அவரது திறமையைக் கண்டு முதலாவது பட்டமளிப்பு விழாவிலேயே அவரைக் கௌரவித்தது. 20 வருடங்களுக்கு மேலாக தமிழ் வளர்க்கும் பரம்பரையை முன்னேற்றிய தொண்டரவர். இலக்கணம் பாரம்பரிய கல்வி முறை. அதைப் பேணிக்காக்க வேண்டும்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் பேணப்பட்டால் யாழ். பல்கலைக்கழகம் அந்த நிறுவனத்தை அங்கீகரிக்கும். பலதரப்பட்ட நிறுவனங்களை வளர்ப்பதன் மூலம் அதனூடாக நல்ல பயன்பாடுகளைக் கொண்ட பாடத்திட்டங்களை உருவாக்கலாம். சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு இருந்தால் இந்த நிறுவனங்களைப் பல்கலைக் கழகம் அங்கிகரிக்கும்.

தவில், நாதஸ்வரம் போன்ற கற்கை நெறியை அவர்களே நடத்தினால் அந்த நிறுவனங்களின் மூலம் பட்டங்களை வழங்கினால் பல்கலைக்கழகம் அதனை அங்கிகரிக்கும். ''யுனெஸ்கோ'' போன்றநிறுவனங்கள் பழைய கலைகளைப் பேணிக்காக்க நிதி உதவிகளைச் செய்கின்றன.

தமிழாசிரியர்கள் கல்வி, சமூக பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர். 1940—60 வரையான காலங்களில் இவர்களின் பணி மிகவும் சிறப்பாக அமைந்தது. மிகக்குறைந்த வருமானத்தில் மிகச்சிறந்த மொழித்திறன் கல்வி விருத்திக்காக உழைத்தவர்கள் அவர்கள்.

இலக்கண வித்தகர் நமசிவாயம் ஐயா இலக்கணச் சிறப்புகளுடன் தமிழ் வளர்த்தவர். அவர் செய்த பணியைப் பல்கலைக்கழகம் நிறைவேற்றவும் அவரது சேவையைப் பெறவும் பின்னிற்க மாட்டோம்—என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தமது அருளுரையில் கூறியதாவது—

நாவலர் வழியில் இந்தப் பிரதேசத்தில் தமிழையும் சைவத்தையும் பேணும் இலக்கண வித்தகர் எனது குருநாதரின் வழிகாட்டலிலும் தொண்டாற்றியுள்ளார். இவர் வாழும் காலத்தில் நாமும் வாழுகின்றோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அறிஞனாக, சொல்வீரனாக விளங்கும் அவர் எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்தார்; இலக்கண வித்தகராக வாழ்கிறார். அவரது கல்வி எம்மை ஆளுமையுள்ளவராக மாற்றும். அவரது உயர்வை அவரது பணியில் இருந்து அறிய முடிகிறது. அதனால் இந்த விழா நிறைவானதாகிறது— என்றார்.

கௌரவிப்பு விழாவில் சதாபிஷேக மலரான 'தேசிகம்' பேராசான் நமசிவாய தேசிகரின் ஆக்கங்களின் தொகுப்பான 'வித்தகர் தரிசனம்' ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

ஆசியுரைகள், பாராட்டுரைகள், நூல்களின் அறிமுக வுரைகள் என்ற வரிசையில் சமயப் பெரியோர்கள் கல்விமான்கள், அறிஞர்கள் பலரும் விழாவில் உரையாற்றினார்கள்.

தேசிகரின் மாணவர்கள் மற்றும் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கினர்.

(விழாவில் ஆற்றப்பட்ட உரைகளின் தொகுப்பு பின்னர் வெளியாகும்) (ஐ-3-111)

## வீதிகள் திருத்தப்படும்

வலி. தென்மேற்கு, மார்ச் 22

மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் விரைவில் முக்கிய வீதிகள் சபை நிதி மூலம் திருத்தப்படவுள்ளன.

இதற்கான அனைத்து நடவடிக்கையினையும் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

முன்னுரிமைப் பிரகாரம் திருத்தப்படவுள்ள வீதிகளின் விவரம் வருமாறு:-

★ சென். ஜேம்ஸ் வீதி — இரண்டு லட்சத்து 70 ஆயிரம் ரூபா.

★ பட்டனசபை ஒழுங்கை — ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா.

★ சோதி வேம்படி வீதி — 2 லட்சம் ரூபா.

★ வடலித் தோட்ட வீதி — 99 ஆயிரம் ரூபா.

★ பாத்திமா வீதி — 3லட்சத்து 70ஆயிரம் ரூபா.

(ஐ-185)

## நாளை

பங்குனி 10

வியாழக்கிழமை

திதி: திருதியை முற்பகல் 10.42 வரை.

நட்சத்திரம்: சுவாதி முன்னிரவு 8.05 வரை.

சங்கடஹரசதுர்த்திவிரதம்

சுபநேரம்: 7.46—9.16

ராகுகாலம்: 1.46 — 3.16

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## துலக்காலச் சிந்தனை

(பதினைந்தாம் நாள்)

கடினப் பாறையாம் எம் உள்ளங்களைக் கனிய வைக்கும் காலமாம். இத் தவக் காலத்தில் எம்மைச் சந்திக்கும் இறைவார்த்தையானது எம்மையெல்லாம் தாழ்மையுள்ளம் கொண்டவர்களாக வாழ அழைத்து நிற்கின்றது.

நம் ஆண்டவராம் கிறிஸ்து தம்மைச் சிலுவை மட்டும் தாழ்த்தினார். வார்த்தையை வாழ்வாக்கிய கிறிஸ்து எம்மையும் தாழ்மையுள்ளம் கொண்டவர்களாக வாழும்படி மலைப்பொழிவு வழியாக அறைகூவல் விடுத்துள்ளார்.

'' உங்களில் பெரியவனாக இருக்க விரும்புகின்றவன் தொண்டனாகஇருக்கட்டும்'' என்ற கிறிஸ்துவின் வார்த்தையை மனமாற்றத்தின் காலமாகிய இந் நாள்களில் செயற்படுத்தமுயற்சிப்போம். நான், எனது என்ற குறுகிய வட்டத்திலிருந்து விடுபட்டு மனிதர் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற உயர்ந்த நோக்குடன் வாழ முன் வருவோம் ''தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான்'' என்ற இறை வார்த்தையை உள்ளத்தில் ஆழப் பதித்து அதன் பிரகாரம் வாழ முயற்சிப்போம்.

கு. தவம்
மானிப்பாய்.

## உதய வாக்கு

பாழ்பட்ட மனம் பாலைவனத்துக்குச் சமமாகும். பாலைவனத்திலே பயிரேது, மலர் எது? பாழ்பட்ட மனத்திலே சிந்தனைக்கு இடமேது உரிமை உணர்ச்சி ஏது? எதுவும் முடியாது.

- அண்ணா

# தமிழ்மொழி வாண்மையை அதிகரிக்கப் பயிற்சிகள்

## ஆரிய பாஷா சங்கம் நடத்தும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஜி.சி.ஈ சாதாரண மற்றும் உயர்தர வகுப்புக்களில் கற்கும் மாணவர்களின் தமிழ் மொழி வாண்மையை உயர்த்தும் பொருட்டு ஆரிய பாஷா திராவிட அபிவிருத்திச் சங்கத்தினால் தேர்வுகள், பயிற்சிகள் என்பன நடத்தப்படவுள்ளன.

மாணவர்களின் வாண்மை விருத்தி தொடர்பாக வலய மட்டங்களிலுள்ள தமிழ் பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு சமுகமளிக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களை ஆரிய பாஷா திராவிட அபிவிருத்திச் சங்கம் நடத்தும் பால பண்டிதர், பண்டிதர் வகுப்புக்களில் சேரவிரும்பும் ஆசிரியர்களின் பட்டியல்களையும் கொண்டு வருமாறு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

(ஐ–5–10)

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### வீதியுலாக் கண்டோம்

கொன்றை மலர் சூடிய சடைமீதினில்
இளம்பிறையின் வடிவு கண்டோம்
பாகத்தே சுமந்து வரும் திருவின்
மலரனைய பாதம் கண்டோம்
அண்டமெல்லாம் போற்றிடக் காலைத்
தூக்கியாடிடும் வண்ணம் கண்டோம்
உன்பெருமைதனை வாயாரப் புகழ்ந்து
பாடும் அடியவரும் சூழக் கண்டோம்
எம்வினை களைய வண்ணையில் வைத்தீஸ்வரனே
உன் எழில் வீதியுலாவும் கண்டோம்!

- நயினை விஜயன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த அருளம்பலம் உதயகுமார் என்பவரது தேசிய அ. அட்டை (690831830V) விசேட அ. அட்டை (0902000823) மாநகரசபை தொழில் அ. அட்டை என்பன 19-03-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். மாநகரசபை பாதுகாவலர் பகுதியில் ஒப்படைத்துதவவும். (74588)

## விற்பனைக்கு

பாவனைக்குகந்த பலகைகள் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு நாடவேண்டிய முகவரி: D.S. ஜெனாட், இல.222,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். (74637)

தமிழ் தட்டச்சு. றோணியோ இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தே. திருமுருகராஜன், N. சிவா ஆட்டோ, கே.கே.எஸ். வீதி, இணுவில். (74691)

## கோழித்தீன் விற்பனை

Prima கோழித்தீன் மூடையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74671)

## புரொயிலர் கோழி

புரொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (74664)

## இறைச்சிக் கோழி

Broiler, Cullbirds இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து [பாதிக் கோழி உட்பட] தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை; நுட்பமான நிறுவை. தொடர்புகளுக்கு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74668)

## புரொயிலர் குஞ்சுகள்

பிறிமா புரொயிலர் குஞ்சுகள் 23 ஆம் திகதி விநியோகிக்கப்படும். ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும். பிறிமா பேட்டுக்குஞ்சுகளுக்கு முன் பதிவு எடுக்கப்படும். தொடர்பு: S. கண்ணா. இல. 31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு. (74685)

## மணமகள் தேவை

தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரியும் 32 வயது மணமகனுக்கு இரண்டில் செவ்வாய்ப் பொருத்தமுள்ள மணமகள் தேவை. காரைநகர் கௌரவ குடும்பத்தினர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு விளம்பர இல. 1032 C/பா உதயன். (74666)

## சமய தீட்சை

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு, சிவஸ்ரீ மகாலிங்கசிவக் குருக்களால் சமய தீட்சை வழங்கப்படும். அடியார்கள் சமய தீட்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் க. அருளானந்தசிவம் அறிவித்துள்ளார். (ஐ-117)

# நெடுந்தீவு மக்கள் தந்த மகஜர்கள் பரிசீலிக்கப்படும்

## இந்தியப் பிரதித் தூதர் தெரிவிப்பு

நெடுந்தீவு, மார்ச் 22

நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகள் குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்து பேசி அவற்றைத் தீர்வுகாண உதவுவேன்.

நெடுந்தீவுக்கு வருகை தந்த இந்தியப் பிரதித் தூதுவர் திரிபாதி இவ்வாறு கூறினார்.

நெடுந்தீவுக்கு வருகைதந்த இந்தியப் பிரதித் தூதுவருக்கு பிரதேச சபைத் தலைவர் அ.வெ. அரியநாயகம் தலைமையில் பொதுமக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

அதற்குப் பதிலளித்துப் பேசுகையில் தூதுவர் திரிபாதி கூறியதாவது:-

உங்கள் குறைபாடுகள் குறித்து நீங்கள் அளித்துள்ள மகஜர்கள் பரிசீலிக்கப்படும். ஒவ்வொரு பிரஜையும் நிறைவாக வாழவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். நான் இங்கு வந்ததில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். வேறு எங்கும் இல்லாதவாறு எனக்கு நீங்கள் அளித்தவரவேற்புக்கு நன்றி கூறுவதுடன் எமது தூதரக உயர்மட்ட அதிகாரிகளுடன் மீண்டும் உங்களிடம் வருகை தருவேன்—என்றார்.

பிரதேச சபைத் தலைவர் அரியநாயகம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

இந்தியாவிற்கும் தீவகத்திற்கும் வரலாற்று ரீதியான தொடர்புகள் உண்டு யாழ் பெருநிலப்பரப்புடன் எமது தீவகத்தின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த வேளை உணவுப் பிரச்சினை இங்கு மோசமாக இருந்தது.

1988 இல் ஏற்பட்ட இந்த மோசமான பாதிப்பில் இருந்து எமது மக்களைக் காப்பாற்ற இருபது படகுகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி எமது மக்களுக்குக் கைகொடுத்த சம்பவம் எங்கள் மனதில் அழியா இடம் பெற்றுள்ளது. அந்த நன்றியை இப்போது நினைவு கூருகின்றேன்.

இந்திய இழுவைப்படகுகள் எமது கடற்கரையை அண்டிய பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இதனால் இங்குள்ள மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதைத் தடை செய்வதுடன் இராமநாதபுரம் மாவட்டத்தை ஒத்த இத்தீவகச் சூழ்நிலைக்கமைய விவசாய அபிவிருத்திகள் மேற்கொள்ள உதவ வேண்டும். இங்குள்ள பொது நூலகங்களுக்குத் தமிழகத்தில் இருந்து வெளியாகும் நூல்களை வழங்கி உதவ வேண்டும்—என்றார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிவதாசன் பேசும் போது கூறியதாவது:-

பண்டு தொட்டு இலங்கை-இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் நெருக்கமான உறவுகள் உள்ளன. இன்றுள்ள சூழ்நிலைகள் நெடுந்தீவு மக்களுக்குப் பலதரப்பட்ட கஷ்டங்களை ஏற்படுத்துகின்றது. அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அனைவரும் மகிழ்ச்சியுடனும் அந்நியோன்னியமாகவும் வாழத் தாங்கள் முடிந்த உதவிகளை இவர்களுக்கு வழங்கவேண்டும். முக்கியமாக மீனவர்களின் பிரச்சினைகளை மகஜர்மூலம் தெரிவித்துள்ளனர். அவை தீர்வுகாணப்பட வேண்டும்—என்றார்.

பாடசாலை அதிபர்கள் சனசமூக நிலையங்கள், மீன்பிடிச் சங்கங்கள் ஆகியனபிரதித்தூதுவரிடம்மகஜர்களைக் கையளித்தன. (ஐ-111)

## கல்விச் சுற்றுலா

யாழ். பல்கலைக்கழக பொது நிர்வாகப்பட்டப்பின் டிப்ளோமா மாணவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கல்விச் சுற்றுலா மேற்கொள்ளவுள்ளனர்.

பிராந்திய ரீதியிலான நிலச்சூழல் மற்றும் குடாநாட்டில் நடைபெறும் பாரிய வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டு ஆராய்ந்து கொள்ளவே மேற்படி கல்விச் சுற்றுலாவை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஏற்பாடு செய்துள்ளார்.

## சாரணர் கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினரால் சாரணர் தலைவர்கள், குருளைச்சாரணர் தலைவர்களுக்காக நடத்தப்படும் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

சாரணர் மாவட்ட ஆணையாளர் நா. சௌந்தரராஜன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் மிலேனியம் ஆண்டில் எமது மாவட்டத்தின் 20 ஆவது ஆண்டு விழா பரி.யோவான் முதலுதவிப் பயிற்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி முதல் மே மாதம் முதலாம் திகதி வரை நீர்கொழும்பில் நடைபெற உள்ள குருளைச் சாரணர் கபோறி விசேட தகுதிகாண் சின்னங்களுக்கான பயிற்சி என்பன பற்றிக் கலந்துரையாடப்படும்.

சாரணர் தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள் மற்றும் அணித் தலைவர்கள் அனைவரையும் இக் கூட்டத்துக்கு அனுப்பி வைக்குமாறு உதவி மாவட்ட ஆணையாளர் க. தர்மேசன் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஐ-152)

# இதய அஞ்சலி

எமது அன்பு நண்பரும் வெஸ்கோ ஸ்தாபன முன்னாள் முகாமையாளருமான O.T. செல்வராஜா அவர்களின்அன்புத் தாயார்

## திருமதி சரஸ்வதி துரைராஜா

இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் க. கு. பத்மநாதன் குடும்பத்தினர்
"வெஸ்கோ"

(சி/11491)

# 8 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத்திட்டம்

## முதலாவது அணியினருக்கு மே மாதம் நிரந்தர நியமனம்

வலி. தென்மேற்கு. மார்ச் 22

எண்ணாயிரம் பட்டதாரிகள் நியமனத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரிகளில் முதல் அணியினருக்கு மே மாத நடுப்பகுதியில் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நான்கு பேர் கொண்ட குழுவினர் அடுத்தவாரம் நிதித்திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டிக்சன் நிலவீரவிற்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்,

கடந்த 17-5-99 அன்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவினால் அனுராதபுரத்தில் வைத்து நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டவர்களே ஒரு வருடத்தின் பின் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

இதேவேளை —

இரண்டாவது தொகுதியில் நியமனம்பெற்றவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் நிரந்தர நியமனக் கடிதங்களைப் பெறுவர் என வரவு - செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம்எஸ்,பி. திவாரத்தினா தெரிவித்துள்ளார். (ஐ-185)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி. மார்ச் 22

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிறுப்பிட்டி வடக்கு காமாட்சி அம்பாள் முன்பள்ளி ஆசிரியை திருகாமநாதன் ஞானேஸ்வரியின் பக்திப் பாடல்கள் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் நிகழ்த்துவார்.

(ஐ-173-30)


தென்னிந்தியத் திருச்சபை - யாழ். ஆதீனம்

**Wanted Bishop's Secretary**

Applications are called for the Post of Bishop's Secretary. Applicants should have qualifications in Stenography and have experience in Office Management.

Applicants should apply through their Pastors.

SECRETARY
J. D. C. S. I.

Diocesan Office,
Vaddukoddai.

(C/11487)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வன் கனகரத்தினம் நஜீவ்

(முதலாம் ஆண்டு மாணவன்,
தொண்டமானாறு வீரகத்தி மகாவித்தியாலயம்.)

| அன்னைமடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1994 - 04 - 12 | 2000 - 02 - 21 |

21-02-2000 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தோருக்கும் எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (22-3-2000) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

(74701)

# செய்தித் துளிகள்

## வலயத்துக்கு மின் வசதி இல்லை

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 22

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு மின்சார வசதிகிடைக்காமையினால் அலுவலகப் பணிகளைச் செய்வதில் கல்விஅதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

போட்டோப்பிரதி இயந்திரம், கணனிகள் போன்றவற்றை இயக்குவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதோடு உரிய காலத்திற்கு உரிய பணிகளை நிறைவு செய்வதிலும் இடர்பாடுகளைச் சந்திக்கவேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (க-133)

## இலவச ஆங்கில வகுப்பு

தென்மராட்சி, மார்ச் 22

தென்மராட்சி இளைஞர் சேவை மன்றங்களின் பிரதேச சம்மேளனத்தினர் பிரதேசத்தில் உள்ள, பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு ஆங்கிலப்பாட வகுப்பினை இலவசமாகக் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடத்துகின்றனர்.

பிரதேச இளைஞர் சேவைகள் அலுவலர் மு. வரதராசன் தலைமையில் நடைபெற்ற வகுப்பு ஆரம்ப விழாவில் மாவட்ட இளைஞர் சேவைகள் அலுவலர் ரி. சக்திவேல், தென்மராட்சி நிஸ்கோ முகாமையாளர்செ.நாகேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-117)

## பஸ் சேவையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை

வேலணை, மார்ச் 22

யாழ். நகரிலிருந்து புங்குடுதீவு பெருங்காடு வரைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பேருந்து சேவையினை இறுப்பிட்டி வரைக்கும் விஸ்தரிக்குமாறு தீவுப்பகுதி தெற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புங்குடுதீவிலுள்ள இறுப்பிட்டி என்னும் இடத்தில் கணிசமான குடும்பங்கள் வசிக்கின்றனர். இந்தப் பகுதி மக்கள் சுமார் நான்கு மைல் நடந்து வந்தே வைத்திய மற்றும் கல்விச்சேவையைப் பெற்று வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (இ-67)

## கல் உடைக்கும் தொழிற்சாலை

நெடுந்தீவு, மார்ச் 21

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தின் கல் உடைக்கும் தொழிற்சாலை கடந்த புதன்கிழமை முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் கு. சண்முகநாதன்ஆலையைத் திறந்து வைத்தார்.

தற்போதைய தலைவர் நா. சங்கரப்பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வுஇடம் பெற்றது.

மேற்படி பல நோ. கூ. சங்கத்தின்முன்னாள் தலைவர் கே. கோபாலசிங்கம் இந்த ஆலையை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-111)

# கைதிகளுக்கு பிணைமறுப்பது அராஜகத்தின் ஒருவடிவமே!

## மலையக மக்கள் முன்னணி அறிக்கை

கொழும்பு, மார்ச் 22

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் பிணையில் செல்வதைத் தடுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதை அராஜகத்தின் மறுவடிவமாகவே கருதவேண்டி உள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அவசரகால சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிணை வழங்க சட்டமா அதிபருக்கு இருந்த அதிகாரத்தினை இரத்து செய்வதற்கு புதிதாக கொண்டு வரப்படுவதாகக் கூறப்படும் சட்டமூலம் ஜனநாயகத்தின் சவப்பெட்டிக்கு அடிக்கப்படும் இன்னுமொரு ஆணியாகவே அமையும்.

வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தற்காலிக நிவாரணம் பெறுவதற்கு இருந்த ஒரே ஒரு சட்டவாயிலும் இதனால் மூடப்பட்டு விடும்.

கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் வழக்குக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இன்னும் பரிசீலிக்கப்படாமல் இருப்பதே தற்போதைய உண்மை நிலைவரமாகும்.

இந்த நிலையில் கைதிகள் தங்கள் பக்க நியாயத்தினை சட்டத்தின் முன்னால் எடுத்து வைத்து பிணையைக் கூட எதிர்பார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதை அராஜகத்தின் மறு வடிவமாகவே கருதவேண்டியுள்ளது.

சட்டமா அதிபரினால் பிணை வழங்கப்படலாம் என்ற சட்ட சரத்துகள் தற்போது இருந்தாலும் இது எல்லா கைதிகளுக்கும் பயன்படவில்லை. அரசின் சமிக்ஞை இல்லாமல் இது அமாத்தியம் என்ற என்ற கருத்தே நிலவி வருகின்றது.

தற்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் அநேகமாக அனைவருமே தமிழர்களாகவே உள்ளார்கள். எனவே பிணைக்கான வாய்ப்பை முற்றாகவே இல்லாதொழிப்பது ஓர் இனத்துக்கெதிரான பழி தீர்க்கும் நடவடிக்கையாகவே அமைந்துவிடும்.

எனவே இந்தச் சட்டமூலம் நாட்டின் அரசியல் போக்கையும் அரசின் நடுநிலை நிலைப் பாட்டையும் உள்நாட்டிலும் உலக அரங்கிலும் கேலிக்குரியதாகவே ஆக்கும் என மலையக மக்கள் முன்னணி எச்சரிக்கின்றது—என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு

நல்லூர், மார்ச் 22

'கியூடெக்ஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இரு நாள் பயிற்சிக் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமையும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ள இப்பயிற்சிக் கருத்தரங்கில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

இதில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி சனிக்கிழமைக்கு முன் கிடைக்கத்தக்கதாக "செயலாளர், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், 17/3, கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-103)

## உயர்தர மாணவருக்கு இந்து சமய பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 22

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்து நாகரிகம் மற்றும் இந்து சமயம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு யாழ். சைவபரிபாலன சபை முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும்முல்லைதீவு, மன்னார், புத்தளம் ஆகிய மாவட்டப் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ள மேற்படி பரீட்சை தொடர்பான சகல விவரங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் அடுத் தமாதம் 2ஆம்திகதிக்கு முன்பாக தமக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சைவ பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

பரீட்சைகள் யாவும் அரசாங்கப் பாடத்திட்டத்துக்கு அமைவாக நடத்தப்படும் எனவும்—

தேர்வுச் செயலாளர் தெரிவித்தார். (ஐ-7)

# வேலணைப் பகுதிக்கு மிக விரைவில் மின்!

## ஜெனரேட்டர் வந்தது

வேலணை, மார்ச் 22

வேலணைப் பகுதிக்கு மிக விரைவில் மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வேலணை வங்களாவடிச் சந்திக்கு அண்மையில் பொருத்தப்படிருந்த பழைய மின் பிறப்பாக்கி அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக புதிய மின் பிறப்பாக்கி ஒன்றுபொருத்தப்பட்டுள்ளது.

முதலில் நாளொன்றுக்கு காலை இரு மணித்தியாலங்களும் இரவு வேளையில் நான்கு மணித்தியாலங்களுமாக மொத்தம் ஆறு மணித்தியாலங்கள் மின் விநியோகம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றன.

இது வரை காலமும் வேலணை மத்திய கல்லூரியிலுள்ள படை முகாமுக்குள்ளேயே மின்பிறப்பாக்கி, மின்மாற்றி என்பன பொருத்தப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டு வந்தது கடந்த பல மாதங்களாக மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மின்விநியோகம் தடைப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-167)

## காசநோய் தினம்

கொழும்புத்துறை, மார்ச் 22

உலக காச நோய் தினம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு அன்றைய தினம் யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் காலை 9.00 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான பிரச்சாரங்களையும், கருத்தரங்குகளையும் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் இலங்கைக் காச ரோக நிவாரண தேசிய சங்க யாழ். கிளையின் ஆட்சிக்குழு உறுப்பினர்களும் பங்குபற்றவுள்ளனர். (ஐ-30)

## சாவகச்சேரி பிரதேச சபை நூலகத்தைப் பொறுப்பேற்றது

தென்மராட்சி, மார்ச் 21

சாவகச்சேரி பிரதேச சபையின் ஏழாவது பொது நூலகம் பிரதேச சபையிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது

கச்சாய் விநோபா சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வந்த இந்த நூல் நிலையம் அங்கிருந்த தளபாடங்கள், புத்தகங்கள் ஆகியவை சாவகச்சேரிப் பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

நூலக விஸ்தரிப்புக்கென அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில்கட்டடம் அமைத்து வழங்க விநோபா சனசமூக நிலையத்தினர் முன்வந்துள்ளனர்.

நூல் நிலையக் கையளிப்பு வைபவத்திற்கு விருந்தினர்களாகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ, யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையைச் சேர்ந்த சமூக அபிவிருத்தி அலுவலர் க. இராமச்சந்திரா ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

கச்சாய் தெற்கு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவி செல்வி தி. வேலுப்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது. (ஐ-117-31)

## ஆய்வுப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 22

உலக வங்கியின் உதவியுடன் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்பு, நிவாரணம் மற்றும் மீள் சமரச நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பான நான்காவது ஆய்வுப்பட்டறை நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இணையத் தலைவர் பொ. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் சூழல் பாதிப்பும் பாதுகாப்பும், பயப்பிராந்தியம், பாரபட்சம், யாழ்ப்பாணத்தில் ஜனநாயகத்தின் நிலை, மனித உரிமை மீறல்கள், அகதி முகாம்கள், சமாதானம், சமரச நடவடிக்கை, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகள் மற்றும் அமுல் செய்யப்பட்ட திட்டங்கள் பற்றிய கருத்துகள் மற்றும் ஆய்வுகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். கண்டி வீதியில் வஸ்தியன் விடுதியில் இந்நிகழ்வு காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை இடம்பெறும். (ஐ-9-4)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 09 — 1972



மறைவு: 22 — 03 — 1996

### செல்வன் சிவசம்பு சிவநேசன்

புன்னகை சிந்தி புன்முறுவல் பூத்ததை
எண்ணிடும் போதினில் எமதுள்ளம்
ஏங்கிடுதே அந்நாளுக்காய்!

ஆண்டுகள் நான்கு என்ன
நாலாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு எம்மை விட்டு நீங்காதையா!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், தம்பிமார், தங்கை,
அத்தான்மார், அண்ணி,
பெறாமக்கள், மருமக்கள்.

வண்ணார்பண்ணை,
34, பி. ஏ. தம்பி லேன்,
யாழ்ப்பாணம். (74677)

# கைதடியில் உருவாகும் கருங்கல் கட்டட ஆலயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் அமைக்கப்பட்டு வரும் கைதடி ஸ்ரீ ஒக்கலை விநாயகர் ஆலய கருங்கற்கட்டட வேலைகள்யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

இதுவரை ஒருகோடியே 50 லட்சம் ரூபாவுக்கு மேல் இதற்கென நிதி செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருங்கற்களினால் அமைக்கப்பட்டுவரும் மேற்படி ஆலயத்திற்கு மேலதிக செலவாக 50 லட்சம் ரூபா இன்னமும் தேவையென ஆலய பரிபாலகர் தெரிவித்தார்.

இந்த ஆலயத்திற்கு இந்தியா, கும்பகோணம் பகுதியில் இருந்து பஞ்சமுக விநாயகர் மற்றும் ஆலயத்துக்குரியவிக்கிரகங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எதிர்வரும் மேமாதமளவில் ஆலயத்தின் 90 வீதமான வேலைகள் முடிவுறும் என ஆலய பரிபாலகர் ஆ. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை—

அருகில் உள்ள தீர்த்தக் கேணியைத் திருத்தித் தருமாறு சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மற்றும் ஐ.நா. பிரதிநிதிகளை ஆலயபரிபாலகர் கேட்டுள்ளார். (ஐ-185)

## 'அறுவடை தரிசனம்'

யாழ்ப்பாணம், மார்ச் 22

கனடாவின் ரொறன்ரோ நகர அறுவடை மிஷனரி சபைப் போதகர் வின்சன் சகாயநாதன் தலைமையிலான 'அறுவடைத் தரிசனம் — 2000' நிகழ்வுகள் இன்று தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் 4 மணி வரை — கலையரங்கு உரும்பிராய்ச் சந்தி.

★ வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை — சிறுவர் கலையரங்கு மைதானம், துணைவி வட்டுக்கோட்டை.

★ சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை — கலையரங்கு, மருதனார்மடம் சந்தி. (ஐ-10)

# சைவ நெறிப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்தவருடம் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சைவநெறிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தர ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களது பெயர் மற்றும் பாடசாலை விவரங்கள் முறையே வருமாறு:-

### தரம் 2

செல்வி யமீலா முகுந்தன் (கரணவாய் வேதாரணியேஸ்வர வித்.), செல்வி கீர்த்திகா ஜெபநாமகணேசன் (உசன் இராமநாதன் ம.வி.), செல்வி சிவஜனனி சந்திரலிங்கம் (கோப்பாய் நாவலர் வித்.)

### தரம் 3

செல்வி யஸ்வினி சண்முகலிங்கம் (கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்.), செல்வி பிரவீணா யோகரத்தினம் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வி சுபிதா இந்திரபவன் (கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை).

### தரம் 4

செல்வி நிலானி சுப்பிரமணியம் (இணுவில் மத்திய கல்லூரி), செல்வன் மங்களேஸ்வரன் தேனுஷன் (அல்லாரை அ.த. வித.), சிவசுப்பிரமணியம் யதுர்ஷன் (வீரசிங்கம் மகா வித் — மீசாலை).

### தரம் 5

கனகநாயகம்விக்னன் (யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்.), செல்வி கஸ்தூரி கணேசமூர்த்தி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஸ்ரீநிவாசன் மோகனமுரளி (நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை).

### தரம் 6

செல்வி கௌசிகா அன்பழகன் (வட்டு. திருஞானசம்பந்தர் வித்.), செல்வி மேனகா தவேந்திரன் (பிரான்பற்று கலைமகள் வித்.), செல்வி இலக்கியா சிதம்பரநாதன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

### தரம் 7

ரங்கநாதன் கோகுல்நாத் (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா, செல்வி சிந்துஜா இராமச்சந்திரன் (ஸ்ரான்லிக் கல்லூரி), செல்வி தேவரஞ்சனா புவனேந்திரன் (சங்கானை சிவப்பிரகாசம் ம. வி.).

### தரம் 8

செல்வி விஷ்ணுமீரா மகாலிங்கம் (வட இந்து மகளிர் கல்லூரி), செல்வி மாளவிகா சேதுராஜா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), செல்வி மாலினி பேரம்பலம் (பெரியபுலம் ம. வி.).

### தரம் 9

ராஜாராம் செந்தூரன் யாழ்ப்பாணக் கல்லூரி), செல்வி ஜானகி கனகராஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.), செல்வி சிவகௌரி சிவலிங்கம் (வைத்தீஸ்வராக் கல்லூரி).

### தரம் 10

செல்வி லக்ஷனா இரவீந்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), செல்வி லஜிதா இரவீந்திரநாதன் (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்.), செல்வி தனுஷியா நாகேந்திரன் (சாவகச்சேரி இந்து).

### தரம் 11

சுஜீவன் இரத்தினசிங்கம் (உடுத்துறை ம. வி.), செல்வி மோகனப்பிரியா தங்கராசா (அத்தியார் இந்து), செல்வன் பார்த்தீபன் கணேசமூர்த்தி (அளவைதிவுசதாசிவ ம.வி.).

### தரம் 12 — இ. நா.

செல்வி ஜெயகார்த்திகா கோபாலன் (வேம்படி மகளிர்), செல்வன் இரஜிந்குமார் துரைசிங்கம் (இணுவில் இந்து), செல்வி ராதிகா விக்னேஸ்வரன் (உடுவில் மகளிர்).

### தரம் 12 — இ. சமயம்

செல்வி பிரபாவினி கந்தசாமி (சாவகச்சேரி மகளிர்), செல்வி அமலோற்பவி இரத்தினவேலு (விக்ரோறியாக் கல்லூரி), செல்வி சுஜித்தா வரதராஜா (சந்திரபுரஸ்கந்த வரோதயக் கல்லூரி).

### தரம் 13 — இ. நா.

செல்வி கயல்விழி பாலசிங்கம் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.), அழகராசா சந்திரகுமார் (பெரியபுலம் ம. வி.), செல்வி சுமதா வேலாதயும் (வரணி ம. வி.).

### தரம் 13 — இ. சமயம்

செல்வி சஜீவா சின்னத்தம்பி (மல்லாம் ம. வி.), செல்வி சுகந்தினி தெய்வேந்திரம் (சாவகச்சேரி இந்து), செல்வி ஜெயசாந்தினி திருநாவுக்கரசு (புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த).

இதேவேளை —

அதிகளவிலான மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றச் செய்த முதல் மூன்று பாடசாலைகள் வரிசையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதலாம் பரிசையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இரண்டாம் பரிசையும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் பரிசையும் பெறவுள்ளன என சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். [ஐ—7]

# வலிகாமத்தில் சோளச் செய்கையை ஊக்குவிக்க விவசாயப் பகுதி முயற்சி

வலிகாமம்தெற்கு, மார்ச் 22

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் பிரிவில் சோளப்பயிர்ச் செய்கையில் விவசாயிகளை ஈடுபடுத்த யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களம், கமநலசேவைத்திணைக்களம்என்றன முயற்சி எடுத்து வருகின்றன.

சென்ற வருடம் தென்மராட்சிப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட சோளப்பயிர் அதிக விளைச்சல் கண்டுபெரு வெற்றி அளித்தமையைத் தொடர்ந்து வலிகாமம் வலயத்திலும் சோளப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

வலிகாமம் பிரிவில் உள்ள உடுவில், உரும்பிராய், புத்தூர் ஆகிய மூன்று கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக அந்தந்தப் பிரதேசங்களில் சோளச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்நடைத் தீவனமாக மட்டுமன்றி, மக்களின் உணவாகவும் பயன்படுத்தப்படும் சோளப்பயிர், புரதம், விற்றமின் ஏ போன்ற சத்துக்கள் நிறைந்த உணவாகும்.

சோளப்பயிரைப் பயிரிட விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான ஊக்குவிப்புக்களை உதவிகளை வழங்கவும், சோளத்தை சந்தைப் படுத்தவும் உரிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் மேற்படி நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளன.

சோள விதைகள், உரவகைகள், நீர்ப்பாசனம் செய்வதற்கு உதவியாக சிறு பண உதவி என்பனவற்றையும் அது சம்பந்தமான தொழில் நுட்ப அறிவையும் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதத்திற்குள் சோளப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவேண்டி இருப்பதால் அது சம்பந்தமான விளக்கங்கள் விவசாய சம்மேளனங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கந்தரோடை கிராம விவசாயசம்மேளனத்தால்ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டம் கந்தரோடை தமிழ்க் கந்தையாவித்தியாசாலையில் நடைபெற்றது.

செ. இலங்கைநாதன்தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில்உடுவில் பிரிவு விவசாய போதனாசிரியர்திருமதி ஜெ. சிவசுப்பிரமணியம் சோளப்பயிர் சம்பந்தமாக விளக்கமளித்தார்.

கந்தரோடைகிராமசேவையாளர்திருநாவுக்கரசு மற்றும் விவசாயிகள் பலர் இக் கூட்டத்தில்கலந்து கொண்டனர். (ஐ-152)

## உளநல மேம்பாட்டு கருத்தரங்கு

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உளநல மேம்பாட்டுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

'கியூடெக்' நிறுவனத்தினால் இக் கருத்தரங்கு இணைப்பாளர் யோசப்பாலா தலைமையில் நடத்தப்படவுள்ளது. (ஐ-30)

## தொற்று நோய்கள் பரவுகின்றன

குருநகர், மார்ச் 22

கடும் வெயில் காரணமாக குருநகர்ப் பகுதியில் கூகைக் கட்டு போன்ற தொற்றுநோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

இந்நோய் இங்குள்ள சிறுவர்களுக்கே அதிகம் பீடிக்கப்பட்டுள்ளது. (ஐ - 51)


## 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 15 — 10 — 1922

மறைவு 21 — 02 — 2000

## அமரர் கிட்ணர் பொன்னையா

முகம் மலர்ந்து நின்ற தாமரையே நீ
முகை அவிழ்ந்து முப்பத்தொரு நாள்களா?
முளைவிட்டுத் தளிர்விட்டு விருட்சமான வேளையிலே
முழுவதும் இழந்தோம் உன் பிரிவால்
முடியவில்லை ஐயா எம் துயரம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

புதுமடம்,
உடுவில் தெற்கு.

(74694)


# நவீன அறிவியலுடன் போட்டி போட முடியாத நிலை எமது மாணவருக்கு

## பாடசாலை பரிசளிப்பு விழாவில் நீதிபதி

வலி.கிழக்கு, மார்ச் 22

நவீன விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத் துறையில் உலகம் மிக வேகமாக முன்னேறிச் செல்கின்றது. ஆனால் இங்கு குடா நாட்டில் போர் நிலைமை காரணமாக இந்த வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. நவீன அறிவியலை அறிவதற்கான வாய்ப்பு எமது மாணவருக்கு அருகியுள்ளது.

யாழ். மாவட்ட நீதிபதி த. விக்னராஜா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி சி. விசுவலிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

நீதிபதி விக்னராஜா மேலும் கூறியதாவது:

நவீன தொழில் நுட்பம் இயந்திரவியல், கணனி தொடர்பான துறைகளின் அதிவேக வளர்ச்சி தொடர்பான தகவல்களை, அறிவை பரந்த அளவில் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு குறுகிய வட்டத்துக்குள் எமது மாணவர்கள் உள்ளனர். ஆங்கில அறிவின்மையும் இதற்கு ஒரு பிரதான காரணமாகும். எனினும் தொடரும் யுத்த நிலைமையே இதில் தாக்கம் செலுத்துகிறது.

தொலைக்காட்சி பார்ப்பதால் மாணவர்கள் சீரழிகின்றனர் என்ற ஒரு கருத்து உள்ளது. எனினும் தொலைக்காட்சி ஓர் அரிய தகவல் தொடர்பு சாதனம்; அதில் நல்லதும் உண்டு; கெட்டதும் உண்டு. மாணவருக்குப் பயன்படும் அறிவுசார் நிகழ்ச்சிகள் பலவும் உண்டு.

முன்னேறி வரும் கல்வி முறைகளில் ஆங்கிலம் மிக முக்கிய மொழியாக அமைகின்றது. ஆனால் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை இங்கு பரவலாக உள்ளது. இது வருந்தத்தக்க நிலை.

இதனைப் போக்க கல்விச் சமூகமும், பாடசாலைச் சமூகமும் உதவ வேண்டும் — எனத் தெரிவித்தார்.

நல்லூர் சட்டநாதர் ஆலய பிரதமகுரு கு. குமாரக்குருக்கள் தனது ஆசியுரையில் கூறியதாவது—

மாணவர்கள் இன்று சமய பாடத்தினைக் கற்கின்றார்கள். பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று பல் கலைக்கழகமும் போகின்றார்கள். ஆனால் அவர்கள்சமய நெறியினை ஒரு பரீட்சையில் சித்தி எய்த வேண்டும் என்பதற்காக மட்டுமே கற்றுவிட்டு அதன் வழி ஒழுகி நடக்கத் தவறி விடுகின்றார்கள். இதுதான் பெரும் வேதனையாக உள்ளது. — என்றார்.

திருமதி விக்னராஜா மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஐ-180)

## வாகனங்கள் (கார்கள்) விற்பனை

கூட்டுறவுத் திணைக்களத்துக்குச் சொந்தமான தற்போது பாவனையில் இல்லாத இரு வாகனங்கள் கேள்விப்பத்திரங்கள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

**வாகனங்களின் விவரம்**

1. வாகன இல. 6 ஸ்ரீ 9471 - "பேஜோ"
2. வாகன இல. 5 ஸ்ரீ 5334 - "போர்ட் கோட்டினா"

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை "18/10, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியில் அமைந்துள்ள கூட்டுறவு அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முடிவுத்திகதி 30.03.2000 ஆகும்.

*எஸ். கே. சண்முகநாதன்,*
*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.*
*யாழ். மாவட்டம்.*

(C/11495)

## நன்றி நவிலல்

### செல்வன் சந்திரமோகன் சுலக்ஷன்

**18.03.2000 அன்று எமது அருமைப் புதல்வனின் மரணச் செய்தி கேட்டு கதிகலங்கி நின்ற எமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த விக்னா கல்வி நிறுவன அதிபர், ஆசிரியர்கட்கும் விசேட அடையாள அட்டைப் பிரிவு உத்தியோகத்தர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

குடும்பத்தினர்,

கோயில்வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(74709)

## கண்ணீர் அஞ்சலி

**எமது வலயக் கல்விப்பணிமனையில் சேவை புரியும்**
**ஆசிரிய ஆலோசகர்களான**
**திரு.எஸ். கயிலைமகான்,**
**திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**
**ஆகியோரின் அன்புத் தாயார்**

### திருமதி சுந்தரம் சின்னத்தம்பி

**அவர்கள் 17.03.2000 அன்று இறைபதம் எய்தியதை முன்னிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

வலிகாமக் கல்வி வலய நலன்புரிக்கழகம்.

*மருதனார்மடம்.*

(74703)


*நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?*

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்'

(C/10933)


## இறுதியாட்டம்

வலிகாமம்தெற்கு,மார்ச்22

வலிகாமம் கல்விவலய பாடசாலை வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையே மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மைதானத்தில் நடைபெற்றுவந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறுகின்றன.

இந்த ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் பின்வருமாறு:-

* யூனியன் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி (17 வயது)
* சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி (19 வயது)
* உடுவில் மகளிர் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

உடற்கல்வி பணிப்பாளர் வி.பாலசிங்கம் போட்டி அமைப்புகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-3-152)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்22

மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி துரையப்பா விளையாட்டரங்கிலஇன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப. 3மணி - ஊர்காவற்றுறை எதிர் சண்டிலிப்பாய்.
* பி.ப. 4மணி - கரவெட்டி எதிர் தெல்லிப்பழை. (ஐ-3)

## கட்டடம் திறப்பு

சாவகச்சேரி,மார்ச்22

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரம்பன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலையின் கட்டடத் திறப்புவிழா இன்று புதன் காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. (ஐ-31)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி துரைராஜா

(மணியக்கா - ஆனைப்பந்தி)

யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி துரைராஜா அவர்கள் 16.03.2000 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற உலகநாதர் துரைராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி இராசையா அவர்களின் பாசமிகு சகோதரியும், O.T. நடராஜா (ஓய்வுபெற்ற உதவிக் கட்டுப்பாட்டாளர், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், தெஹிவளை), திலகவதி இராஜேந்திரம் (கொட்டாஞ்சேனை), O.T. செல்வராஜா (விவேகா பார்மஸி, கல்வியங்காடு), O.T. ஆனந்தராஜா, காந்திமதி யோகநாதன், O.T. தர்மராஜா (வன்கூவர், கனடா), ராஜசுலோசனா ஸ்ரீதரன் (மொன்றியல், கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் R. இராஜேந்திரம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம்), T. யோகநாதன் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர், ஆனைப்பந்தி), S. ஸ்ரீதரன் (கனடா), புவனேஸ்வரி (தெஹிவளை), கிருஷ்ணலீலாதேவி (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ராதிகா, ரமணன், சுதர்ஷினி, தனுஷாந்தினி, குகதீபன், ஜெகா, கண்ணன், உங்கு, தனுஷியன், சிந்துஜா, கார்த்திகேயன், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.03.2000) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு (புதியநேரம்) நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.297, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(C/11490)

## திருமதி மகேஸ்வரி ஸ்ரீகரன்

(இணுவில் மேற்கு)

இணுவில் மேற்கில் வதியும் திருமதி மகேஸ்வரி ஸ்ரீகரன் அவர்கள் 19.03.2000 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஸ்ரீகரன் (லங்கா சிமெந்து லிமிட்.) அவர்களின் அன்பு மனைவியும் ஜனார்த்தனன், மயூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வசுந்தராதேவி, மனோரஞ்சிதம், சிவகுமாரன், சண்முககுமார், சண்முககுலகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிலிங்கம், சிவநாதன், விஜயவேணி, அருள்மதி, சுகுந்திராதேவி, நீலாம்பிகை (ஜேர்மனி), மனோகரன், தனலோஜினி (கனடா), தர்மலோஜினி (பிரான்ஸ்), ஜெயகரன் (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம், ஜெயரத்தினம், யோகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் அன்னலட்சுமி, இராசரத்தினம், ஞானம்மா, தவராசலிங்கம், பாலச்சந்திரன் (ACF) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (20.03.2000) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
நடராசா ஸ்ரீகரன்
(கணவர்)

(74704)

## கந்தவனம் கதிர்காமசிங்கம்

(அளவெட்டி செட்டியார்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் கதிர்காமசிங்கம் நேற்றுமுன்தினம் (20.03.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் - நெல்லிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற தில்லையம்மாவின் சகோதரனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வாலாம்பிகை, ஜகசோதி (U.S.A.), காலஞ்சென்ற கைலாயபிள்ளை (K.K.P.), சொர்ணவடிவேல் (கதிர்காமசிங்கம் சன்ஸ் உரிமையாளர்), ஸ்ரீரங்கம் (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் லவேந்திரநாதன் (ஓய்வுபெற்ற O.A., கட்டடத் திணைக்களம்), கருணாகரன் (U.S.A., T.O.), திலகவதி, சாரதா, Dr.கணேசரட்ணம் (M.R.C.P., D.C.H. - U.K.) ஆகியோரின் அன்பு மாமனும் ஹம்சானந்தி (B.Sc.), ஹம்சரூபன் (பல்கலைக்கழகம் முதலாம் வருடம், U.K. - கணக்காளர் பிரிவு), மயூரதி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), கஜேந்திரன் (லக்சா பல்கலைக்கழகம் - இரசாயன பொறியியலாளர் இரண்டாம் வருட மாணவன்), கல்பனா (U.S.A. மாணவி), கஜவதனி, மயூதரன், குருதரன் (மகாஜனக் கல்லூரி), கிரிதரன், சயந்தன் (மருத்துவபீடம் 3ஆம் வருடம் U.K.), இனிதன் (மருத்துவபீடம் முதலாம் வருடம், U.K.), விநோதன் (U.S.A., மாணவன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2000) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பல்லாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அண்ணாமலை வீடு,*
*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
மனைவி, மகள், மகன்

(74696)

## திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்

திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - கண்ணம்மா தம்பதியினரின் மருமகளும் திரு. பரராஜசிங்கம் (யாழ். மாநகர சபை, இளைப்பாறிய ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி, சண்முகநாதன் (சவுதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி மல்லிகா ரெட்ணசிங்கத்தின் (இளைப்பாறிய ஆசிரியை), மைத்துனியும் ஜெயக்குமார் (புனித பத்திரிசியார் கல்லூரி, பலாலி ஆசிரியர் கலாசாலை), சாந்தகுமார் (யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), வசந்தகுமார் (டோகா), உதயகுமார் (டோகா), கௌரிதேவி (பவானி), சுரேஸ்குமார் (கனடா), பிறேம்குமார் (டோகா), சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயசோதி, ரோகினி, சுலோச்சனா, வசந்தகுமாரி, லோகசிவம் (ஜேர்மனி), சுகுணாதேவி (கனடா), பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரி, கஸ்தூரி, அனோஜன், ஆரணி, ஆரபி, அஜந்தன், மீரா, குமணன், வைஷ்ணவி, ஷைணவி, கஜனி, சுஜனி, ரம்யா, சுரண்யா, பிரவீண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-03-2000) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 42, புங்கன்குளம் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*42, புங்கன்குளம் வீதி,*
*கொழும்புத்துறை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ப.ஜெயக்குமார்
(மகன்)

(74712)

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று எவ்.ஆர்.ஸி.எஸ். பட்டங்களைப் பெற்றுள்ள மயில்வாகனன் சிவசூரியாவுக்கு யாழ். பல்கலைக் கழகம் கடந்த ஆண்டு விஞ்ஞானக் கலாநிதி என்னும் கௌரவப் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

எம்.பி.பி.எஸ். (இலங்கை), எவ்.ஆர்.ஸி.எஸ். (இங்கிலாந்து), எவ்.ஆர்.ஸி.எஸ். (எடின்பரோ), எவ்.ஆர்.ஸி.எஸ். (கிளாஸ்கோ), எவ்.ஏ.ஸி.எஸ்., எவ்.ஆர்.ஸி.ஓ.ஜி. (பிரிட்டன்), எவ்.ஸி.ஓ.ஜி. ஆகியன பேராசிரியர் சிவசூரியா பெற்றுள்ள மருத்துவப் பட்டங்களில் சில என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக பேராசிரியர் பதவியை அவர் துறந்துள்ள காரணத்தால் யாழ்.போதனா ஆஸ்பத்திரியும் அவரது நிபுணத்துவ சேவையை இழக்கும் என்றும் -

இதனால் அங்கு மகப்பேற்றியல், பெண்ணோயியல் சிகிச்சைகள் முற்றாகப் பாதிப்படையும் என்றும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலையுடன் சுட்டிக்காட்டின.

யாழ். ஆஸ்பத்திரிக்கு வெளியில் தனிப்பட்ட மருத்துவ சிகிச்சை (Private Practice) எதிலும் பங்கு பற்றாமல் போதனா ஆஸ்பத்திரியில் மட்டும் அவர் மருத்துவ சிகிச்சைப் பணியில் ஈடுபட்டுவந்தவர் என்பதும்-

அவருக்குக் கீழ் மகப்பேற்றியல் 'வார்ட்' சிறப்பாக இயங்கி வந்தது என்பதும் - குறிப்பிடத்தக்கவை.

ஏற்கனவே துறைசார்ந்த பேராசிரியர்கள், உரிய கல்வித் தரமுடைய போதனாசிரியர்கள் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ். மருத்துவபீடத்துக்கு பேராசிரியர் சிவசூரியா பதவியிலிருந்து நீங்குவது அதன் கல்வித்துறை அங்கீகாரத்தைப் பெரிதும் பாதிக்கும் என மருத்துவ வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.(உ)

## கூட்டணிக்குழு ஜனாதிபதியை சந்திக்கும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் அடங்கிய குழு ஒன்று இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து இனப் பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தலைமையில் ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கும் இக்குழுவினர் யாழ் நிலைவரம் குறித்தும், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவர்

# அரசு - எதிர்க்கட்சி சந்திப்பு; முக்கிய முடிவு எதுவும் இல்லை

கொழும்பு,மார்ச்22

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அரசு - ஐ.தே.க. பிரதிநிதிகள் மூன்றாவது தடவையாக நேற்று சந்தித்த போதிலும் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவில்லை என்றும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுக் காலை அலரிமாளிகையில் நடந்த இந்தச் சந்திப்பில் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

பிராந்திய சபைகளுக்கு ஆளுநர்களை நியமிக்கும் விடயத்தில் இணக்க நிலை ஏற்பட்டதாக இரு தரப்பும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடன் ஆராய்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை இரு கட்சிகளும் மீண்டும் சந்திக்கும். (ஐ-3-7)


எமது இன்றைய ஒறிஜினல் வீடியோ C.D. வெளியீடு

விஜயசாந்தி, சிம்ரான், நிழல்கள்ரவி நடித்த

★தலைவி

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(C/11500)


## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் மற்றும் கப்பல் போக்குவரத்து அபிவிருத்தித் துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள நந்தா மத்தியூவிடம் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், வாணிப கப்பல் போக்குவரத்துத் திணைக்களம், மத்திய போக்குவரத்து பணியகம் ஆகிய துறைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ-3-7)

## 68 பேரின்....

(முதலாம் பககத் தொடர்ச்சி)

கடிதங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்குக் கிடைத்துள்ளன.

சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தக் கடிதங்களை அனுப்பி வைக்க மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

1995ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சை மூலம் நீங்கள் கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தீர்கள்.

இந்த நேர்முகப் பரீட்சையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பாகத் தொடரப்பட்ட மூன்று வழக்குகளில் 16-10-99இல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் பிரகாரம் தங்களது நியமனம் ரத்து செய்யப்பட்டுள்ளது - என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் ஆரம்பநெறி ஆசிரிய பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. (ஐ-3)

## 5 படையினரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டிருந்தார்.

பிரஸ்தாப சந்தேகநபர்களை ஒவ்வொரு தவணைக்காகவும் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதில் பாதுகாப்புச் சிக்கல்கள் உள்ளதால் இந்த வழக்கு விசாரணையைக் குடாநாட்டுக்கு வெளியே கொழும்பு அல்லது வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றலாம் என்று ஒரு சாரார் கேட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த நிலையில் - பிரஸ்தாப சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான அனுலா டி சில்வா, உழல் இந்திக குமாரப்பெரும ஆகியோரும் மற்றும் ஒரு சட்டத்தரணியும் வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று பிணை விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இந்த விண்ணப்பத்தை ஏற்க நீதிவான் மறுப்புத் தெரிவித்தார்.

வடமாகாண நீதி நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதில் இந்த நீதிமன்றம் ஈடுபட்டது.

கடந்த 16ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்துக்கு நீதிவான் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால் இந்த நீதிமன்றம் யாழ்ப்பாண வழக்குகள் தொடர்பான முடிவுகளை இனி எடுக்க முடியாது என்று நீதிவான் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நீதிமன்றம் இயங்கவில்லை என்று சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

பிணை விண்ணப்பத்தை ஏற்க மறுத்தமைக்கான காரணத்தை மேல் நீதிமன்ற நீதிவான் பிரதம நீதியரசருக்கு அறிவித்துள்ளார். (ஐ-3-164)


## உடன் தேவை

கணனியில் எழுத்தமைப்பு (ரைப் செற்றிங்) செய்வதற்கு ஆள்கள் (இருபாலாரும்) தேவை.

கல்விச் சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## NEW SCIENCE COLLEGE

யாழ்ப்பாணம்.

வினா - விடை வகுப்பு
இலத்திரனியல்
திரு. சம்பந்தன் B.Sc.
ஆரம்பம்:- 23-03-2000
வியாழன் காலை 7.00

(74689)


## பொதுக்கூட்டம்

மருத்துவபீட மாணவர்கள் அனைவரும் இன்று (22.03.2000) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்தில் கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்,
மருத்துவபீடம்.
யாழ்.பல்கலைக்கழகம். (74714)


எமது மண்ணின் வாழ்வியல் அவலங்களின் தரிசனம்.....

புதைகுழிகள் பேசப்போகின்றன

உறவுகளைத் தொலைத்தவர்களின் உள்ளக் குமுறல்களும், மூச்சுக்களும் அக்கினியாக 26/03/2K ஞாயிற்றுக்கிழமை (காலை 10.30, மாலை 3.30) யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் மீண்டும் அரங்கேறப்போகின்றது.

AKKINIP PERUMOOCHCHU

(DRAMA)

Time : 26-03-2K (sunday)
: 10.30 a.m & 3.30 p.m

Vavuniya District students' union
University of Jaffna.

விளம்பர அனுசரணை,

லலிதா புடவை மாளிகை

உங்களின் ஜவுளித் தேவைகளுக்கும் கல்யாணப் பட்டுப் புடவைகளுக்கும் தலை சிறந்த ஸ்தாபனம்

இல. B3, சந்தை வீதி,
வவுனியா.

இல. 5,6, புதிய சந்தை,
யாழ்ப்பாணம்.

எமது வீடியோ C.D. வெளியீடு

விஜயசாந்தி, சிம்ரான், நிழல்கள்ரவி நடித்த

✱ தலைவி

* TIGER CLAWS
* FIRST STRIKE
* HEART DRAGON
* THE KILLER METEORS
* SPIRITUAL KUNG FU
* OPERATION CONDOR - 2
* CRIME STORY
* BOLT
* SOLO

பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்க் வீடியோ லைபிறறி

அம்மன் வீதி.

(C/11497)

இன்றைய ஓடியோ C.D. வெளியீடு

இசைப்புயல் A.R. ரகுமானின்

❖ கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

◆மௌனத்தில் பேசாதே

மூர்த்தி வீடியோ சென்ரர்

மானிப்பாய்.

(C/11499)


INSTITUTE OF INFORMATICS STUDIES

## முக்கிய அறிவித்தல்

நிறுவன தினத்தில் (25.03. 2K) சான்றிதழ் பெறவிருக்கும் 1999/2000 கல்வியாண்டில் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்கள் அனைவரும் புதன்கிழமைக்கு (22/03/2K) முன்பதாக தலைமை அலுவலகத்தில் தமது பதிவினை அவசியம் மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS.

(C/11482)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நுணாவில் மத்தியைச் சேர்ந்தவரும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் விசேட ஆணையாளருமாகிய

திரு. க.கேதீஸ்வரன் அவர்களின்
அன்புத் தாயார்

✱ திருமதி மணியம் இராசம்மா

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.
வலி.கிழக்கு பிரதேசசபை,
நீர்வேலி.

(C/11496)

## கண்ணீர் அஞ்சலி

We Serve

உரும்பிராய் லயன்ஸ் கழக இயக்குநர் சபை உறுப்பினர்
லயன் அ. கமலசேகரம்
(நில அளவையாளர், உரும்பிராய் சந்தி) அவர்களின்
தந்தையார்

வீரசிங்கம் அருளம்பலம்

அவர்கள் நேற்று நீர்கொழும்பில் காலமானார் என்ற செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரும்பிராய் அரிமா கழகம்.

(C/11498)

## மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை ஜெகநாதன் (நாதன்)

புளியங்கூடலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜெகநாதன் (நாதன்) அவர்களின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று (22.03.2000) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
அமிர்தநாயகி
(ராணி)

80, சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

(74715)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.